ஸ்ரீஜிநாய நம:

# மேருமந்திர புராணம்

மூலமும் உரையும்

## 1. வைசயந்தன் முத்திச் சருக்கம்

### கடவுள் வாழ்த்து

1. குற்றங்கள் இல்லான் குணத்தால் நிறைந்தான் குணத்தால்
மற்றிந்த வையம் அளந்தான் வையன் நின்ற பெற்றி
முற்றும் உரைத்தான் உரை ஈரொன்பதாயது ஒன்றால்
செற்றங்கள் தீர்ப்பான் விமலன் சரண் சென்னி வைத்தேன்.

குற்றம் குறைகள் அறவே இல்லாதவனும், முடிவிலா அறிவு முதலிய எண் குணங்கள் நிறையப் பெற்றவனும், தனது ஞானத்தால் உலகனைத்தையும் அளந்தறிந்தவனும், இந்த உலகத்தில் நிலை பெற்றிருக்கின்ற உயிர் உயிரற்றவை ஆகிய ஒன்பது பொருள்களின் தன்மையைத் தனது திவ்யத் தொனியால் வெளிப்படுத்தி பதினெண் மொழிகள் மூலம் உலகறியச் செய்தவனும், தனது வழியைப் பின்பற்றுகின்ற உயிர்களின் கோபதாபங்களைப் போக்குகின்றவனுமாகிய விமல தீர்த்தங்கரர் பாதங்களை எனது சென்னியால் வணங்குகின்றேன்.

### அவையடக்கம்

2. மேதக்க சோதி விமலன் கணத்துக்கு நாதர்
மாதக்க கீர்த்தி உயர் மந்தரர் மேருநாமர்
போதக் கடலார் புராணப் பொருளான் மனத்தைச்
சோதிக்கலுற்றேன் தமிழால் ஒன்று சொல்ல உற்றேன்.

மேன்மை மிக்க ஒளி பொருந்திய விமல தீர்த்தங்கரரின் பன்னிரு கணங்களுக்குத் தலைவர்களாகிய பெருமையும், புகழுமெய்தியவர்கள், மேரு என்றும் மந்தரர் என்றும் பெயர் பெற்றவர்கள், கடல் போன்ற நூலறிவுடையவர்கள். அவர்களது புண்ணிய வரலாற்றை உரைப்பதின்மூலம் எனது மனத் திண்மையைச் சோதிக்க முற்பட்ட நான், தமிழ் மொழியால் இக்காப்பியத்தைப் படைக்கலுற்றேன்.

3. மலை போல நின்று வெயில் வன்பனிமாரி வந்தால்
நிலை பேர்தல் இல்லார் நிலையின்முன் எண்ணாது நின்றேன்
கலையான் நிறைந்தார் கடந்த கவிமாக் கடலின்
நிலையாது மெண்ணாது இது நீந்துதற்கும் எழுந்தேன்.

கொளுத்தும் வெயில், கொடிய பனி, கொட்டும் மழை ஆகிய இந்த மூன்று காலங்களிலும் மலை போலச் சலியாது நின்று தமது தவநிலையில் சற்றும் தளராத முனிவர்களின் குழுவில், தவத்தினது கடுமையை உணராது, துறவு பூண்டு நிற்கின்ற நான், நூலறிவு முழுமையாக எய்திய மேலோர்களால் (சுருதகேவலி) கடக்கப்பட்ட மிகப்பெரிய நூற் கடலின் ஆழம் அறியாது கடக்க முற்பட்டுள்ளேன் (அதாவது தத்துவத்தைக் கூறும் பணியில் ஈடுபடுகிறேன்).

4. நல்லோர்கள் போயவழி நாலடிப் போயினாலும்
பொல்லாங்கு நீங்கிப் புகழாய்ப் புண்ணியமும் ஆகும்
சொல்லால் நிறைந்த சுதகேவலி சென்றமார்க்கம்
சொல்வான் எழுந்தேற்கு ஒருதீமையுண்டாக வற்றோ.

நல்லவர்கள் சென்ற வழியை ஓரளவு பின்பற்றினாலும், தீவினைகள் நீங்கிப் புகழும் புண்ணியமும் உண்டாகும்; பயன்மிக்க சொற்களால் நிறைந்த நூலறிவு மிக்க மேலோர்களான மேரு மந்தரர்கள் மேற்கொண்ட நெறியினைச் சொல்ல முற்பட்ட எனக்கு எவ்வித இடையூறும் உண்டாகாது.

5. பொன்னைப் பொதிந்தகிழி பொன்னோடிருந்த போழ்தில்
பொன்னைப் பொதிந்தகிழி தன்னையும் பொன்னின்வைப்பர்
புன்மைச் சொல்லேனும் புராணப் பொருளைப் பொதிந்தால்
நன்மைக்கண் வைத்தற்கு இனிநாம் இரங்கும் படித்தோ.

பொன்னோடிருக்கின்ற வரையில் அதை முடித்துவைத்த துணியும் பொன்னைப் போலவே பாதுகாப்பைப் பெறும்; அதுபோல் சொற்கள் எளிமையானவை எனினும் நல்லோர்களது புண்ணிய வரலாற்றைச் சொல்ல முற்பட்டால் உலகம் அதை மேலாக ஏற்றுக்கொள்ளும் என்பதில் ஐயத்திற்கோ கவலைக்கோ இடமில்லை.

## நூல்

6. மணிமுடி கவித்து வேந்தன் மன்னவர் தன்னைச் சூழ
அணியினோடிருந்தவே போல் அயங்கியங் கடலும் தீவும்
தணிவில் சூழ்மேரு வென்னும் தடமுடி கவித்துச் சம்பூ
வணியினோடிருந்த தீபத்தரசன தகலத்து அம்பொன்

அழகிய மணி முடியைத் தரித்த மன்னர் மன்னன் வேந்தர்கள் தன்னைச் சூழ்ந்திருக்க அழகுடன் நாளோலக்கம் இருந்தது போல் 'சம்பூ' என்னும் பெருந்தீவானது (நாவலந்தீவு) மேருமலை என்னும் மகுடத்தைத் தரித்து கணக்கற்ற கடல்களாலும், தீவுகளாலும் சூழ விளங்கியது. அத்தீவின் மையப் பகுதியில்,

7. திருவெனத் திகழ்ந்து செம்பொன் மலையினைச் சேர்ந்து தீர்த்தம்
மருவியே செல்லும் கந்தமாலினி என்னும் நாடு
விரவிலா விதேகர்க் கென்றும் உறையுளாய் விதேகநாமம்
மருவியநாட்டுச் சீதோதகை வடதடத்திலுண்டே.

சீதோதகை என்னும் நதியின் வடக்குப் பகுதியில் இல்வாழ்க்கையில் ஆர்வமில்லாத பிறவியைப் போக்கும் முனிவர்களுக்கு இருப்பிடமாகிய விதேகம் என்னும் தேசத்தில் உள்ள மேரு மலைச்சாரலிலே, திருமகளைப் போன்று அனைத்து நலன்களையும் எய்தி எக்காலத்தும் குறைவில்லாத அறம் தழைக்கின்ற 'கந்தமாலினி' என்னும் நாடு உள்ளது.

## நாட்டுச் சிறப்பு

8. ஐஞ்சிறப்பு அயரும்தேவர் நால்வகைக் குழுவோடம்பொன்
இஞ்சி சூழ்ந்திலங்கும் ஏழுநிலத்திறை இருக்கை வட்டம்
அஞ்சிலம்பார்கள் ஆடல் அறிவன தெழுச்சியாதி
எஞ்சிடா அந்தநாட்டின் பெருமையார் இயம்ப வல்லார்.

மூன்று பொன்மதில்களால் சூழப்பட்டதும், ஏழுவகைச் சுற்று நிலங்களையுடையதும், ஐந்து வகையான சிறப்புக்களை நடத்தும் நான்கு வகைத் தேவர்கள் நிறைந்திருப்பதும், மூன்றுலகநாதனாகிய இறைவன் எழுந்தருளி இருப்பதுமாகிய 'சமவசரணம்' என்னும் அற்புத ஆலயமும், அழகிய சிலம்பணிந்த தேவ மகளிர் ஆடலோடு கூடிய இறைவனது திரு உலாவும் குறைவற இருக்கும் அந்த 'கந்தமாலினி' நாட்டின் பெருமையை உரைக்க வல்லவர் யார்?

9. மணியிலா மலையுமில்லை வனப்பிலா வனமுமில்லை
கணியிலா நிலமுமில்லை கரும்பிலாக் காடுமில்லை
அணியிலா மகளிரில்லை அழகிலா மைந்தரில்லை
துணிவிலாத் துறவுமில்லை தூய்திலா ஒழுக்கமில்லை.

அந்த நாட்டில் இரத்தினங்கள் இல்லாத மலைகள் இல்லை, எழிலற்ற சோலைகள் இல்லை, விளைவற்ற நிலங்கள் இல்லை, கரும்பிலா காடுகளில்லை. அழகும் பண்புமற்ற மகளிரோ மைந்தரோ இல்லை, உறுதியற்ற ஒழுக்கக் குறைவான துறவியர் இல்லை.

10. கற்பிலா மகளிரில்லை கருணையில்லாரு மில்லை
பொற்பிலா அறமும்இல்லை போதம் இல்லாருமில்லை
தற்கமில்லாரும் இல்லை தானமில்லாருமில்லை
சொற்கண் மெய்யிலாத இல்லை தூயரல்லாருமில்லை

அந்த நாடடில் கற்பு நெறியற்ற பெண்களோ, அருளற்ற ஆடவரோ இல்லை; பேசாதவர் இல்லை அரைகுறையான தரும சிந்தனையாளர்களோ முழுமையான நூலறிவு இல்லாதவர்களோ இல்லை, நல்லதோர் உரையாடல்களை நால்வகை தானங்களைச் செய்யாதவர் இல்லை, உண்மையற்ற சொற்களைப் பேசுவோர் இல்லை, தூய்மையற்றோர் யாரும் இல்லை.

11. மணிநல வைரம் பைம்பொன் வரன்றிமா திரையும்சந்தும்
துணிநல வகிலும் கொம்பும் தோகையும் மயிரும்ஏந்தி
வணிகநல் லொருவன்போல வயலக மடுத்தவாறு
பணிவிலாப் பழங்கொள் தெங்கின் இலையெனப் பரந்ததன்றே.

அந்நாட்டில் ஓடிய நதியானது தனது பெரிய அலைகள் மூலம் மணிகளையும், பொன்னையும் சந்தனக் கட்டைகளையும், யானைத் தந்தங்களையும், மயில் தோகைகளையும், கவரிமானின் நீண்ட மயிர்களையும் வாரிக்கொண்டு ஓர் ஒப்பற்ற வணிகனைப்போல் வயலிடத்தைச் சேர்ந்து தென்னை ஓலையைப்போல் பல பிரிவாகப் பிரிந்து பரவியது.

12. குழைகளும் மலரும் செற்றிக்குயில்களும் மயிலும் ஆர்த்து
மழையென மதுக்கள் பெய்து வண்டொடு தும்பிபாடி
விழைவுறந்தகையவாகி வேண்டினார் வேண்டிற்றீயும்
அழகுடை மரங்கள் போன்ற அம்மலர்ச் சோலையெல்லாம்.

அந்த நாட்டின் அழகார்ந்த சோலைகள் எல்லாம் அழகிய தளிர்களாலும் மலர்களாலும் நிரம்பப்பெற்று மயில்களும், குயில்களும் தங்கியிருக்க, மழை பெய்து தேன் சிந்த வண்டுகளும், தும்பிகளும் பாட அனைவரும் விரும்பும் வனப்புடையனவாகி விரும்பியவற்றைத் தருகின்ற கற்பக மரத்திற்கு நிகராக விளங்கின.

13. மதியோடு மீன்கள் நீலமணித்தலத்து இருந்த வேபோல்
பொதியவிழ் கமலம் ஆம்பல் பூத்தன பொய்கை எல்லாம்
மதிமிசைக் கறுப்பின் வெண்டா மரைமிசை வண்டின் பாடல்
மதியன்ன முகத்தின் நல்லார் வாய்ப்பண்ணின் எழுச்சித்தொன்றே.

நீர் நிலைகளிலெல்லாம் தாமரையும் அல்லியும் பூத்துக் கிடந்த தோற்றம் நீலமணி போன்ற வானத்தில் சந்திரனைச் சூழ்ந்த விண்மீன்களைப்போல விளங்கியது; தாமரை மலர்களில் தங்கிய வண்டுகளின் தோற்றம் சந்திரனில் காணும் களங்கத்தைப்போல் காட்சியளித்தது; வண்டுகளின் இனிய இசையானது முழுமதி போன்ற முகத்தினையுடைய அழகிய பெண்ணின் இசைப்பாடலை நிகர்த்திருந்தது.

14. அன்னமென் குருகு தாரா நாரை வண்டானங்கோழி
துன்னினபெடைக ளோடும் துறந்தவும் அழைத்த தோற்றம்
இன்னரிச் சிலம்பின் நல்லார் சில்லரி சிலம்ப ஆடிக்
கன்னியாழ் பயிலும் சாலை போன்றன கயங்க ளெல்லாம்.

அழகிய அன்னம், குருகு, தாரா, நாரை, வண்டானம், நீர்க்கோழி ஆகிய பறவைகள் தத்தம் பெடைகளோடு கூடிக்களிக்கும்போது எழுப்பிய ஒலி அழகிய பெண்கள்

ஆடுகின்றபோது அவர்தம் கால்களில் அணிந்திருந்த சிலம்போசையையும், மேலே சொன்ன பறவைகள் தத்தம் பெடைகளைச் சேர்வதற்காக அழைத்த குரலோசை இளம் பெண்கள் இசைத்த யாழ் ஓசையையும் ஒத்திருந்தன.

15. சாலிகள் கரும்பிற் செற்றிச் சாலவும் உயர்ந்து தம்மின்
மேலளவொத்துச் செம்பொன் விரிந்துடன் ஈன்று மேலோர்
காலுற வணங்குவாரிற் கமலத்தின் இறைஞ்சிக் காய்த்த
நீலநல் பவழம் முத்தின் கழுத்தவாய் நிறைந்தபூகம்.

அந்த நாட்டிலே நெற்பயிர்கள் கரும்புக்கு நிகராக வளர்ந்து ஈன்று பொன்போன்று முற்றிய மணிகளையுடைய கதிர்கள் பெரியோரை வணங்குகின்றவர்களைப் போல ஓரத்திலுள்ள தாமரை மலர்களில் வளைந்து படிந்து காணப்பட்டன. முத்துப் போன்ற மலரும் நீலமணி போன்ற காய்களும், பவழம் போன்ற பழங்களுமுடைய பாக்கு மரங்கள் எங்கும் நிறைந்திருந்தன.

16. சொற்பழி இலாமை யானும் தூயநல் ஒழுக்கி னானும்
இல்பிறப் போம்ப லானும் எள்ளற்பா டின்மை யானும்
நற்றவற் கீத லானும் நாதன்சீர் ஓத லானும்
கற்புடைக் காமர் வல்லி யார்களே போலும் ஊர்கள்.

மக்கள் பழியற்றவர்களாய், உயர்ஒழுக்கமுடையர்களாய் ஏற்றுள்ள இல்வாழ்க்கைக்கேற்ப மற்றவர்களைப் பாதுகாப்பவர்களாய் யாராலும் எள்ளப்படாதவர்களாய், நற்றவம் ஏற்ற முனிவர்களுக்குத் தவறாது தானம் செய்பவர்களாய், அருகபெருமான் அடிபோற்றும் தன்மையுடையவர்களாய் விளங்கும் அவர்களைக் கொண்டிருக்கும் ஊர்கள், கற்புமிக்க மலர்க்கொடி போன்ற அழகிய மாதர்களுக்கு நிகராக விளங்கின.

(வேறு)

17. பாரிலுள்ளவர்க்கெலாம் படுபயன் பொதுவுமாய்
ஏர்மலிந்திடங்கள் எங்கும் இன்பமே பயந்துநல்
வேரிசாந்தம் ஊடுபோகிமேவி ஆடல் பாடலோடும்
வாரமாதர்போன்ற மாடவூர்கள் தோறும் மாடெலாம்.

வளமார்ந்த மாளிகைகளையுடைய அவ்வூர்களிலுள்ள செல்வங்கள் அனைத்தும் உலக மக்களுக்குப் பயன்பட்டு எங்கும் இன்பத்தையளித்து அழகார்ந்து காணப்பட்ட நிலையானது சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களால் தங்களை அலங்கரித்துக்கொண்டு நாட்டிய மேடையில் தங்கள் கலைச் செல்வத்தை அனைவரும் நுகரும்படி ஆடலையும் பாடலையும் நிகழ்த்துகின்ற மங்கையரின் நிலை போன்றதாகும்.

18. சுந்தரத் தலம்மணி சுவர்பளிங்கு செம்பொனால்
அந்தரத்தடக்கமாய் அனேகமாலை நான்றகம்
மைந்தரும் மயிலனாரும் மல்குமாட மாளிகை
இந்திர விமானம் இங்கிழிந்திருந்த நீரவே.

தரைகள் மணிகளால் இழைக்கப்பட்டுச் சுவர்கள் பளிங்கினால் அமைக்கப்பட்டு, செம்பொன்னால் கூறைவேயப்பட்டு, எல்லா இடங்களும் பல வகையான மணிகள், மலர்மாலைகள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டு மயில் போன்ற மங்கையரும், அழகிய ஆடவருடன் வசிக்கின்ற மாளிகைகளின் தோற்றம் இந்திர விமானம் பூமியில் வந்திறங்கியது போல் விளங்கியது.

19. சாதுரியம் இல்லவருமில்லை மைந்தர்தம் சொலு
மாதுரிய மில்லவையும் இல்லை மற்றவர் செயல்
போதுரியம் இல்லவையும் இல்லை பொன் எயிலிறைக்
ஆதரமும் இல்லவரும் இல்லையந்த நாடெலாம்.

அந்த நாட்டில் கல்வித்திறன் அற்றவர்களோ, இனிய வார்த்தைகளைப் பேசாதவர்களோ, காலத்திற்குத் பொருந்தச் செயல்படாதவர்களோ இல்லை; மூன்று பொன் மதில்களால் சூழப்பட்ட சமவ சரணத்தில் எழுந்தருளியிருக்கும் அருக பிரானிடத்தில் பக்தி இல்லாதவர்களும் அங்கில்லை.

20. சீலரும் வதங்களும் செறிவு மில்லவரிலை
காலை மாலை நீதியோடு கல்வி இல்லவரிலை
வேலை மன்பு நல்ல தானமின்றி உண்பவரிலை
மாலை காலை மாதவரை வந்தியாரு மில்லையே

ஒழுக்கம், விரதம், அடக்கம் இவை இல்லாதவரில்லை; காலையும் மாலையும் முறையோடு கல்வி கற்காதவர் இல்லை, உயர்ந்தோர்களுக்கு உணவளிக்காது உண்பாரில்லை. இரண்டு வேளைகளிலும் தவமுனிவர்களை வணங்காதவர்களும் இல்லை.

21. ஐங்கணைக் கிழவனைக் கடந்த மெய்த்தவரெனும்
புங்கவர்க்கு இறைவனற் சிறப்பு முன்பிலா தன
மங்கலத் தொழில்களில்லை மானமா யமர்ந்தநாடு
எங்குமில்லை யாவரும் இறைஞ்சி மெய்யொழுகலான்.

ஐந்து மலர்க் கணைகளையுடைய காமனை வென்ற மேலான தவமுனிவர்களின் தலைவனான அருக பெருமானுக்கு முறைப்படி பெருஞ் சிறப்பினைச் செய்த பிறகே எந்த நல்ல செயல்களையும் துவங்குவார்கள்; அனைவரும் உண்மையான இறையுணர்வோடு ஒழுகலாவ், தான் என்ற செருக்கோ மனம் வேறு சொல் வேறுபட்ட மயக்கமோ இல்லாதவர்களாய் மக்கள் விளங்கினர்.

22. நடுக்கடற் பிறந்தசங்கி னுள்ளிருந்த பாலினற்
குடிப்பிறந்த மைந்தர்தம் குழைமுகம் பிறர்மனை
இடைக்கண் வைத்தலில்லை காதலர்கள் மேலுமார்வமூர்
கடைக்கணோக்கிலாத மாதர்கற்பை யாவர்செப்புவார்.

ஆழ்கடலில் தோன்றிய சங்கினது வெண்ணிறத்தைப் போன்ற தூய குடியில் பிறந்த குண்டலமணிந்த ஆடவர் எவரும் பிறர் மனைவியரைக் கண்களாலும் நோக்கமாட்டார்கள்; தமது காதலர்மீது அன்பார்ந்த மகளிர் பிற ஆடவரைக் கடைக்கண்ணாலும் நோக்கார்; அவர்தம் கற்பின் பெருமை சொல்லற்கரியதாகும்.

23. அணியினுக் கணியனார்க ளாடுமா மயிலனார்
மணியை மண்ணி வைத்தனார்கள் வஞ்சமின் மனத்தினார்
பணிவிலா வொழுக்கினார்கள் பண்ணவர்ப் பழிச்சுவார்க்
கணிகைமாதர் சீலமின்ன காமுறுந் தகையவே.

ஆடும்மயில் போன்ற இணையற்ற அழகமைந்த பரத்தையர், ஒழுங்குடன் தீட்டப்பட்ட இரத்தினத்தைப் போன்றவர்கள், கபடமற்ற உள்ளத்தினர் குறைவிலா வாழ்க்கையுடையவர்கள்; அருகபரமனைத் துதிப்பவர்கள் இத்தகையர் தம் வாழ்க்கை நெறியும் மற்றவர்களால் போற்றற்குரியதாகும். (இங்குக் கூறப்படும் 'பரத்தை' காமக் கிழத்தியாவாள்).

24. இடையறா தறிவொளி இரவி அங்கெழுதலால்
கடையிலா அறிவிறைவன் ஆலயங்க ளல்லது
படரொளி விமானத்தோடு பாயிருள தின்மைபோல்
விடையுலாவி ஆதியாய வேற்றிலிங்கம் இல்லையே

ஒளி பொருந்திய சூரிய மண்டலத்திற்கு முன்னால் படர்ந்த இருளானது மறைந்தொழிவதுபோல நீங்காத கடையிலா அறிவாகிய ஒளியுடைய இறைவன் அருக பெருமானது ஆலயங்களைத் தவிர எருதை வாகனமாகக் கொண்ட ஈஸ்வரன் போன்ற கடவுளர்க்கு அந்நகரில் இடமே இல்லை.

25. குறையிலாக் குடிகளால் குழீ இயவூர் கொடைவளர்த்து
இறையிடும் இவற்றினால் இயல்பினாய நாடெழின்
நிறைமதி நடுவணெய்த நின்றமீன் குழாங்கள்போல்
இறைவன திருக்கை சூழ்ந்த நாலெண்ணாயிரங்களே.

கல்வி செல்வம் ஒழுக்கம் இவற்றால் குறைவற்ற குடிமக்கள் நால்வகைத்தானங்களைச்செய்தும், மன்னனுக்குச் செலுத்த வேண்டிய வரியைத் தவறாது செலுத்தியும் ஊர்களில் வாழ்ந்தனர். அதுபோன்ற முப்பதாயிரம் ஊர்கள் அரசனது தலைநகரத்தைச் சூழ்ந்திருந்த தோற்றம் சந்திரனைச் சூழ்ந்திருந்த விண்மீன்களுக்கு நிகராயின.

(வேறு)

## நகரச் சிறப்பு

26. அறைகழல் அரசர் கோமா னிருக்கைய தமைதி செப்பிற்
குறைவிலா வீதசோகம் குபேரன திருக்கை போலும்
நெறியினால் புகையிரண்டா றொன்பது நீண்டகன்று
மறுகு மாநதிகள் போன்று வழங்கு மாயிரத்ததாமே.

ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த மன்னனது வீத சோகமென்னும் தலைநகரத்தின் பெருமையைச் சொல்ல வேண்டுமாயின் அந்நகர், குபேரனது குறைவற்ற செல்வமுடைய அளகாபுரிக்கு நிகரானது என்று சொல்லலாம். அந்நகரம் பெருமைமிக்க பேறாறுகள் போல் பன்னிரண்டு யோசனை நீளமுடைய ஆயிரம் தெருக்களையுடையது.

27. அறுபது தலைவைத் திட்ட மூன்று நூறறிவன் கோயில்
செறிமலர்ச் சோலைக் குன்றம் வாவியும் செப்பின் அன்ன
அறுபதிற் குணிக்கப்பட்ட ஆயிரம் சேரி பாடி
அறுபதோ டிசைந்த பத்தால் குணித்த ஆயிரங்கள் தாமே.

மேலும் அந்நகரத்தில் முன்னூற்று அறுபது ஜினாலயங்கள் உண்டு. மலர் நிறைந்த சோலைகள், செய்குன்றுகள், குளங்கள் இவைகளும் முறையே அதே அளவினதாகும். நகரத்தைச் சூழ்ந்து, அறுபதினாயிரம் சேரிகளும், போர்வீரர்கள் போன்றோர் வசிக்கும் எழுபதாயிரம் பாடிகளும் நிறைந்திருந்தன.

28. அஞ்சு நூற்றிரட்டி வாயில் ஏழு நூறாகும் பூழை
துஞ்சிலாப் பலிபெய் பீடம் ஆயிரம் சதுக்கம் அன்ன
குஞ்சரம் கடாவி வாழும் குடிகளும் நூற்றுக்கோடி
இஞ்சி மாநகரம் இவ்வாறு இயற்கையின் இயன்ற தொன்றே.

வீதசோகம் என்னும் அந்த நகரத்தில் கோபுர வாயில்கள் ஆயிரம், திட்டிவாயில்கள் எழுநூறு; இடையறாது பூசைகள் நடைபெறும் பலிபீடங்கள் ஆயிரம், தெருக்கள் கூடும் நாற்சந்திகள் ஆயிரம், மற்றும் யானைகளை அடக்கிப் பழகிச் செலுத்துகின்ற தொழில்புரிவார் தொகை நூறு கோடி இத்தகைய சிறப்பினையுடையது அந்நகரம்.

(வேறு)

29. சுந்தரம் மலர்க ளெண்ணெய் சுண்ணந் தாது குங்குமம்
சந்தனக் குழம்பு மேற்பரந்து பாடி சூழ்ந்தகழ்
அந்தரத்து அருக்கனை அணிந்துசூழ் கிடந்ததோர்
இந்திர தனுவின் வண்ணம் என்ன தன்ன தாகுமே.

அழகிய வண்ணமலர்களும், நறுமணத் தைலங்களும் நறுமணப் பொடியும் மகரந்தமும், குங்குமமும், சந்தனக் குழம்பும் படிந்து அழகாகக் காட்சியளித்த அகழியால் சூழப்பட்ட அந்நகரின் தோற்றம், ஒப்பற்ற அழகிய வானவில்லானது கதிரவனைச் சூழ்ந்திருந்தது போல் இருந்தது.

30. கிடங்கிடைத் தடங்கள் சூழ்ந்து கேடுதோற்ற மின்றியே
மடங்கன் மொய்ம்பின் வானவர்க்கும் மீதுபோ கொணாமதில்
தடங்கடல் மரைத்தலத் தரையுஞ்சூழ மானவர்க்
கடந்திடா வகையினின்ற நாகந்தன்னைக் காட்டுமே

கேடும் தோற்றமும் இல்லாத அகழியும் அதையடுத்த வெற்றிடமும் எத்தகையயெனின் அகழியானது புட்கரவரம் என்னும் கடலுக்கு நிகராகவும் வெற்றிடமானது புட்கரத்தீவைப் போன்றும், சிங்கம் போன்ற விண்ணவர்களாலும் கடக்க இயலாத மதிலானது மானுடோத்தரம் என்னும் மலைக்குச் சமமாகவும் விளங்கின.

31. திக்கயம் மலைகள் போல் சிறந்துநின்ற கோபுரங்கள்
ஒக்குமா ளிகைநிரைக் குல மலைகள் ஒத்தன
மிக்கமா சனம்செல் வீதி சீதையாதி யாறன
சக்கரன்றன் மாளிகையும் மேருவென்ன தன்னதே.

அம்மதில்மேலுள்ள கோபுரங்கள் திக்கு மலைகளைப் போல் சிறந்து விளங்கின. வரிசையாக அமைந்த மாளிகைகள் குல மலைகளைப் போலவும், மக்கள் நெருக்கம் மிகுதியாக உடைய தெருக்கள் சீதா, சீதோதா போன்ற நதிகளுக்கு நிகராகவும் மன்னனின் அரண்மனையானது மேரு மலையைப் போன்றும் காட்சியளித்தன.

32. முகிற்கணங்கள் பொன்மலையை மொய்த்த யானை போன்மொய்ப்ப
பகற்கிடை கொடாத செம்பொன் மாளிகைப் படிந்தன
அகிற்புகை அளாயநீர் மதத்தருவி போன்றன
துகிற் கணங்கள் அந்நகர் மதிமறுத் துடைக்குமே.

அரசனது பொன்னாலாகிய மாளிகைகளில் அமைந்துள்ள கதிரவனையும் தடுக்கும் உயர்ந்த சிகரங்களில் தவழும் மேகக் கூட்டங்களின் தோற்றம் மேரு மலையைச் சூழ்ந்து நிற்கும் யானைக் கூட்டங்களைப் போல் காட்சியளித்தன; அகிற் புகை கலந்த நறுமண நீர் மாளிகைகளிலிருந்து சொரிவது யானைகளின் மதநீர் சொரிவதற்கு நிகரானது; மேலே பறந்த கொடிகளின் தோற்றம் சந்திரனுடைய களங்கத்தைத் துடைப்பது போல் தோன்றியது.

33. பளிக்கறைத் தலத்தினூடு பந்தோடாடு பாவையர்
களிக்கயல் அனைய கண்கள் காமர்பந்தின் மேற்செல்வ
வளைந்தநல் புருவவில் மலர்க்கணை தொடுத்துவில்
விளைப்பநீங்க மாரனம் பிலக்கிலெய்த தொக்குமே.

பளிங்குத் தரையிலே பந்தாடுகின்ற பாவை போன்ற அழகிய மகளிரின் களிப்புமிக்க கெண்டை மீன்களைப் போன்ற கண்களின் பார்வை ஓடுகின்ற பந்துகளின் மேல் செல்லுகின்ற தோற்றம், வளைந்த புருவங்களாகிய வில்லில் கண்களாகிய மலர்க் கணைகளைத் தொடுத்து, நன்கு வளைத்து காமன் தனது இலக்கு நோக்கி எய்த தன்மையை ஒத்தது.

(வேறு)

34. மாலைசாந் தெண்ணெய் சுண்ணம் கைசெய்வார் மறுகு மைந்தர்
கோலவார் குழலி னார்போல் இருந்தன அணிசெய் வீதி
மாலைமா மணியும் முத்தும் வீழ்ந்தவை கிடந்த தோற்றம்
மேலுலாம் வானயாறு வீழ்ந்திவட் கிடந்த தொன்றே.

அழகிய மலர் மாலைகளையும், நறுமணச் சாந்து, நெய் முதலியவற்றையும், வண்ணப் பொடிகளையும் தங்கள் கைத்திறத்தால் தயாரிக்கின்றவர் வாழும் சிறிய தெருக்கள், அழகிய மைந்தர்களையும், நீண்ட கூந்தலையுடைய மகளிரையும் ஒத்திருந்தன. எழில் மிக்க பெரிய வீதிகள் மலர் மாலைகளும், மணிகளும், முத்தும் கேட்பாரற்று கிடந்த தோற்றம் தெய்வ நதியாகிய ஆகாய கங்கை இந்நகரிலே விழுந்து ஓடாது கிடந்த தோற்றம்போல் விளங்கியது.

35. குழைமுகம் புரள வாங்கிக் கொடுஞ்சிலைப் புருவம் கோலி
அழலுமிழ்ந் திலங்கும் வேற்க ணம்புகோத் தாட வாரை
உழையின்மென் னோக்கத் தெய்திட் டுள்ளத்தைப் பறித்துக் கொள்ளும்
மழலையாழ் மொழியி னார்தம் வாழ்க்கையார் உரைக்க வல்லார்.

காதுகளில் அணிந்த குழைகள் முகத்திலே புரளும்படி அசைத்து, கொடிய இலைகளைப் போன்ற புருவங்களை வளைத்து சூடேறிய செந்நிறவேல் போன்ற கண்களாகிய அம்புகளைத் தொடுத்து மானின் மருண்ட நோக்குபோல் செலுத்தி ஆடவர் உள்ளங்களைப் பறித்துத் கொள்ளும் யாழ் ஓசை போல் இனிய சொற்களையுடைய பெண்களின் வளமார்ந்த வாழ்க்கைத்திறத்தினை யாரால் உரைக்க இயலும்.

36. கள்ளுமிழ்ந் திலங்கும் வாசக் கமலவான் முகத்துக் காமர்
உள்ளமும் கண்ணும் வண் டோடுடன் சுழன்று ஆடவாடித்
தெள்ளொளி யாழும் பாட்டும் திருவனார் பயிலும் சாலை
புள்ளொலித்து அளிகள் பாடும் தாமரைப் பொய்கை போலும்.

தேன் சிந்தும் மணம்மிக்க தாமரை மலர்போன்ற ஒளிமிக்க முகத்தில் அழகுடன் விளங்கும் கண்களும் அவர்தம் மனமும் வண்டுகளுடன் சுழன்று ஆடும்படி ஆடும் நடனத்தையும் தெளிவான ஒலிஎழுப்பி யாழிலே பாடும் பாட்டையும் பயிலுகின்ற திருமகளைப் போன்ற பெண்கள் கலை பயிலும் இடங்கள் ஒலிக்கும் பறவைகளும் பாடும் வண்டுகளும் நிறைந்த தாமரை குளத்துக்கு நிகராக விளங்கின.

37. ஆனைதேர் குதிரை நிற்கும் இடம்படை அடைக்கும் சாலை
சேனைமா வேந்தர் தெவ்வர் தருதிறைக் காணும் சாலை
மானவேல் மன்னர் கோமான் மந்திரச் சாலை ஆதி
ஏனைய பிறவும் இவ்வா றியம்புதற் கரிய வன்றே.

யானை, தேர், குதிரை முதலியன தங்கும் இடங்களும், ஆயுதங்களைக் குவித்து வைக்கும் இடங்களும், படை மிக்க பகைவேந்தர்கள் செலுத்திய திறைப் பொருட்கள் வைக்கப்பட்ட காட்சிச் சாலைகளும் வேலேந்திய மன்னர் மன்னனது மந்திராலோசனை மண்டபமும் மேலும் இது போன்ற அரிய இடங்களும் இயம்ப முடியா பெருமை யுடையவனாகும்.

38. காமவேள் அனையர் மைந்தர் காவியங் கண்ணி னாரும்
பூமகள் இலங்கும் வீரர் போர்ப்புலிக் குழாங்கள் போல்வார்
தாமவெண் குடையி னானும் சக்கரன் தன்னை ஒக்கும்
வாமஞ்சூழ் கமலம் சங்கின் வண்கையார் வணிகர் எல்லாம்

அந்த நகரத்து இளைஞர்கள் காமனைப் போன்ற அழகுடையவர்கள், நீலமலர் போன்ற அழகிய கண்களையுடைய மகளிர் திருமகளுக்கு நிகரானவர்கள், சிறப்பு மிக்க போர்வீரர்கள், புலிக்கூட்டங்களைப் போன்றவர்கள், மாலையணிந்த வெண் கொற்றக்

குடையினை உடைய மன்னன் விண்ணவர் வேந்தனுக்கு நிகரானவன் வளம்மிக்க வணிகர்கள் தாமரை சங்கு போன்ற புண்ணிய இரேகைகளைப் பெற்ற சிறப்புடையவர்கள்.

39. மாலையும் சாந்தும் பஞ்சவாசமும் வழங்கு வாரும்
சாலியின் அடிசில் உண்பார் தமர்களுக் கூட்டு வாரும்
வேலைநல் உலகம் விற்கும் விழுப்பொருள் வாங்கு வாரும்
ஆலயந் தோறும் ஐமை அமர்ந்துசெய் வாரு மானார்.

அழகிய மலர் மாலைகளையும், மணம் மிக்க சாந்தினையும் தாம்பூலம் முதலியவற்றையும், மற்றவர்களுக்கு வழங்குகின்றவர்களும், சாலி என்னும் உயர்ந்த அரிசியினால் ஆக்கப்பட்ட உணவை உறவினர்களுக்கு அளித்து உண்பவர்களும் கடல் சூழ்ந்த இவ்வுலகில் விற்கப்படுகின்ற சிறந்த உயர்ந்த பொருள்களை வாங்குகின்றவர்களும், அருகபெருமானது ஆலயங்களில் மனம்பொருந்திப் பெருஞ்சிறப்பினை ஆற்றுகின்றவர்களுமாக மக்கள் விளங்கினர்.

40. முழவமா முரசம் சங்கம் கடலென முழங்க அம்பொன்
குழலியாழ் வீணை ஏங்கக் கொம்பனார் குலாவி யாட
நிழலுலா மதியம் போலும் குடைமும்மை நீழல் வேந்தன்
விழைவறா முதூர் வீத சோகமாய் விளங்கு நின்றே.

முழவு, மாமுரசு சங்கு போன்றவை சேர்ந்து கடல் போல் முழங்கவும் அழகிய குழல் யாழ் வீணை முதலிய இனிமையாக இசைக்கவும் மலர்க்கொடி போன்ற மகளிர் சேர்ந்து ஆடவும் முழுமதிபோன்ற முக்குடை வேந்தனாகிய அருகபெருமானுக்குக் கொடுக்கும் திருவிழா இடையறாது நடக்கும் அப்பழைமையான நகரம் 'வீதசோகம்' என்னும் பெயருக்கேற்பப் புகழுடன் விளங்கியது.

(வேறு)

## வைசயந்தன் சரிதை

41. பொன் னுலகுலாய்ப் போந்து பூமிசை
மன்னு மன்னவிம் மாந கர்க்கிறை
அன்ன மென்னடை யார்க்க ணங்கனாம்
மன்னர் மன்னவன் வைச யந்தனே.

விண்ணுலகமானது தான் இருக்கும் இடம் விட்டு இறங்கிவந்து இம் மண்ணுலகில் நிலை பெற்று விட்டதோ என்னும் படியான இந்த நகரத்தின் தலைவனானவன் அன்னம் போன்ற மென்மையான நடையையுடைய பெண்களுக்குக் காமனைப் போன்றவன், மன்னர் மன்னனாகிய அவனது பெயர் 'வைசயந்தன்' என்பதாகும்.

42. ஆறு தீநயம் அகன்ற காட்சியான்
ஆறு நன்னயம் அமர்ந்த மாட்சியான்
ஆறு தொல்பகை அடர்த்த சூழ்ச்சியான்
ஆறில் ஒன்றுகொண் டகன்ற வேட்கையான்.

அம்மன்னன் தீ நயம் ஆறும் இல்லாதவன், நன்னயம் ஆறும் பொருந்தியவன், தனது மிக்க திறமையினால் அறுவகையான கொடிய பகைகளை வென்றவன், மக்களிடமிருந்து ஆறில் ஒன்றை இறையாகப் பெற்று பேராசை சிறிதும் இல்லாத மாட்சியுடையவன்.

43. கற்பகம் அவன் கருதிற் றீதலால்
சொல் பொருளறி சுருதி மாக்கடல்
மற்புயத் தினான் மால்வ ரைமலைக்
கொற்ற வர்க்கெலாம் கூற்றன் ஒக்குமே

அம் மன்னன் வேண்டியவர்களுக்கு விரும்பியதைக் கொடுத்தலால் கற்பகத்திற்கு நிகரானவன், நூல் பொருளை முழுமையாக உணர்ந்திருத்தலின் நூற்கடல் எனப்போற்றத்தக்கவன், மற்போரிலே மலையைப் போன்றவன், மாறுபட்டுப் போர்புரிகின்ற மாற்றரசர்களுக்குக் கூற்றத்திற்கு நிகரானவன்.

44. சூழ்ச்சியால் பகை சுருக்க லல்லது
வாட்செய் போரிலன் வன்சொல் இன்றிமண்
ஆட்சியால் இசை கேட்ட அசுணமாத்
தாட்சி போல்வையந் தான் இறைஞ்சுமே.

தந்திரத்தினால் எதிரிகளை அடக்குதலின்றி வாட்போர் போன்ற கொடிய யுத்தத்தைத் தவிர்ப்பான்; இனிய சொற்களினாலே அனைவரையும் மகிழ வைத்து ஆட்சி செய்ததால், இனிய இசையைக் கேட்டு மகிழும் அசுணமா என்னும் பறவையைப் போல் இவ்வுலகம் இவனை விரும்பி வணங்கி வாழ்ந்தது.

45. நல்ல தொல்குலத்து அரசன் ஆதலால்
சொல்லும் செய்கையும் சோர்வெய் தாமையால்
புல்லினார் புகழ் மாது பூமகள்
சொல்லின் செல்வியும் சுளிவு நீங்கியே.

அவ்வேந்தன் பழைமை மிக்க உயர் குலத்தில் தோன்றியதாலும், சொல்லும் செயலும் மாறுபடாது சோர்வின்றிச் செயல் பட்டதாலும் புகழ் மகளும் பூமகளும் கலைமகளும் தங்களுக்குள் வேறுபாடு நீங்கி ஒரு சேர இவனிடத்தே தங்கி இருந்தனர்.

46. கற்பகம் தனையணை காமர் வல்லிபோல்
வெற்றிவேல் வேந்தனை வேள்வி நீர்மையால்
பொற்பமைந் தெழுதிய கொடியனார் புணர்ந்து
அற்புநீர்க் கடலிடை அழுந்து நாளிலே.

கற்பக மரத்தைச் சேர்ந்த காமவல்லிக் கொடியைப் போல், வெற்றி வேல் வேந்தனாகிய வைசயந்தனை வேத முறைப்படி மணந்த ஓவியம் போல் அழகிய, கொடி போன்ற மங்கையர் அன்பு நீர் நிறைந்த இன்பக் கடலிலே மூழ்கிய நாளிலே.

(வேறு)

47. பூவிற் கொம்பும் புகழும் படிநல் வடிவின்மா
தேவிப் பட்டம் பெற்றனள் எல்லாம் திருவென்பாள்
காவிக் கண்ணாள் வதனக் கமலத் தளியாய் மண்
காவற் கோமான் இயலும் நாளாற் கவின் பெற்றாள்.

திருமகளும் போற்றிப் புகழும் படியான ஒப்பற்ற அழகினையுடைய 'எல்லாம் திரு' என்னும் பெயர் பெற்ற பட்டத்தரசியினது நீல மலர் போன்ற கண்களைப் பெற்ற முகத்தாமரையின் அழகை வண்டு போல் வேந்தன் பருகி வாழும் நாளில் அவள் கருவுற்றுப் புதியதோர் எழில் பெற்றாள்.

48. முல்லைக் கன்னிக் கொடிமுன் னரும்பைப் பயந்தாற் போல்
செல்வச் சிறுவற் பயந்தா ளந்தத் திருவன்னாள்
மல்லிற் பொலிதோள் மன்னன் முன்னாள் மதிகாணா
ஒல்லென் கடல்போல் உவந்திட் டுலகத் திடர் தீர்த்தான்.

இளமை மிக்க முல்லைக் கொடியானது முதன் முதலாக ஓர் அரும்பை ஈன்றதுபோல், எல்லாம் திருவென்பாள் அழகிய புண்ணிய மகனைப் பெற்றாள். அதுகுறித்துமற்போரிலே பொலிவு பெற்ற தோள்களையுடைய வேந்தன் முழுமதி கண்ட கடல் போல் மகிழ்ந்து வாரிவழங்கி உலகத்தவரின் வறுமையைத் தீர்த்தான்.

(வேறு)

49. சுண்ணம் எண்ணெய்ச் சொரிந்தனர் தூரியம்
விண்ணை விம்மி முழங்கின வெண்கொடி
அண்ணல் தோன்றலும் எங்கணும் ஆடின
புண்ணி யன்னகர் பொன்னக ராயதே.

மன்னனுக்கு மகன் பிறந்த மகிழ்ச்சியில் நறுமணப் பொடிகளையும் மணம் மிக்க தைலங்களையும் மிகுதியாக வாரி வழங்கினர். பல்வேறு இசைக்கருவிகள் விண் முட்ட முழங்கின. முதல் மகன் பிறந்ததைக் குறிக்க வெண்ணிறக் கொடிகள் எங்கும் பறந்தன. புண்ணிய வேந்தனது நகரம் விண்ணவர் நகரத்துக்கு நிகராக விளங்கியது.

50. சஞ்ச யந்தன் எனும் பெய ரானவன்
அஞ்சு தாயர்தம் கைவழி அந்திவாய்
மஞ்சிலா மதிபோல வளர்ந்த பின்
அஞ்சிலோ தியர்க்கு இன்னமிர் தாயினான்

சஞ்சயந்தன் எனப் பெயர் சூட்டப்பெற்ற குழந்தை யானவன் ஐந்து வகையான செவிலித் தாயார்களின் பாதுகாப்பிலே களங்கமற்ற வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து இளமை எய்தி அழகிய சூந்தலையுடைய பெண்களுக்கு அமுதம் போல் விளங்கினான்.

51. குஞ்சிகள் நிழன் மணிக்கதிர்க் குழா முகம்
மஞ்சிலா மதிபுய மணியெழுக் கண்மார்
வஞ்சி நுண்ணிடை மலராட் கிடந்துடை
அஞ்சொலார் மனக்களி றணைபொற் றம்பமே.

சஞ்சயந்த குமாரனது தலைமுடியானது நீலமணியின் ஒளிக்கதிர்களைப் போன்றும், அழகார்ந்த முகம் களங்கமற்ற முழுமதியைப்போன்றும், தோள்கள் எழில்மிக்க இரும்புத் தூண்களைப் போன்றும் விளங்கின. அகன்ற மார்பானது திருமகள் தங்கும் இடமாகவும், துடைகளானவை இனிமையாகப் பேசும் மங்கையரது மனக்களிற்றினைப் பிணிக்கும் பொன்கம்பங்காளயும் அமைந்தன.

52. மணியினைக் கடைந் தாக்கிய வானவில்
கணைபெய் தூணிக ளாம்கணைக் காலடி
பிணிய விழ்ந்த செந்தாமரைக் பீடினால்
அணியினுக் கணியும் அவன் ஆயினான்

அவனுடைய கணுக்கால்கள் வான வில்லிலே தொடுக்கும் கணைகளை நிரப்பிவைக்கும் இரத்தினத்தினாலமைந்த அம்பறாதூணிகளை ஒத்திருந்தன. காலடிகள் மலர்ந்த செந்தாமரை மலர்களைப் போன்றன, இத்தகு சிறப்பினால் அத்திருமகன், அழகுக்கெல்லாம் அழகு செய்பவனாக விளங்கினான்.

53. இந்து வின்னுத யத்திலங் குந்திசை
வந்த தாரகை போல மடந்தைபால்
மைந்தன் வந்து பிறந்து சயந்தனென்று
இந்த வையக மேத்த வளர்ந்தநாள்.

முழுமதி தோன்றியதால் ஒளி மிக்க கீழ்த்திசையிலே, அடுத்து உதித்த ஒரு விண்மீனைப் போல் பட்டத்தரசியின் திருவயிற்றிலே மற்றும் ஒரு மகன் பிறந்து 'சயந்தன்' என்ற பெயருடன் இவ்வுலகம் போற்றுமாறு வளர்ந்தான்.

54. புண்ணியம் உதித்துழிப் போக மெய்துமால்
அண்ணல் சஞ்சயந்தன் நல்குமர னாயுழி
விண்ணுறை திருவனாள் வேள்வி நீர்மையால்
பண்ணமை மொழியளோர் பாவை எய்தினாள்.

முற்பிறவியில் செய்த புண்ணியம் உதயமான போது அனைத்து இன்பங்களும் வந்து சேரும் என்பதற்கேற்ப இளமையும் சிறப்பும் பொருந்திய சஞ்சயந்த குமாரனுக்கு விண்ணுறையும் திருமகளுக்கு நிகரான அழகும் இனிய இசை போன்ற பேச்சாற்றலும் பெற்ற பாவை ஒருத்தி வேதமுறைப்படி மனைவியாக அமைந்தாள்.

55. வண்டுபூ மலர்ந்துழி மதுவை யுண்பதில்
தொண்டைவாய் அவள் நலம் பருகு நாளவன்
வண்திரை வலம்புரி மணியை யீன்றவா
புண்தவழ் வேற்கணாள் புதல்வற் பெற்றனள்.

இளவரசனான சஞ்சயந்தன் மலர்ந்த மலர்களிலுள்ள மதுவை உண்ணும் வண்டு போல், கொவ்வைக்கனி போன்ற வாயினையுடைய அவளுடன் இன்பத்தைப் பருகும் நாளில் வளம்மிக்க அலை வீசும் கடலில் தோன்றிய வலம்புரிச்சங்கானது முத்தை ஈன்றது போல் ஓர் மகனைப் பெற்றனள்.

## வைசயந்தன் சமவ சரணம் சேர்தல்

(வேறு)

56. மதிதலைப்பட்ட போழ்தின் மகிழ்ந்து வைசயந்த னென்றே
நிதியறை திறந்து வீசிநீதியால் செல்லு நாளுள்
துதைமலர் அசோக மென்னும் வனத்திடைச் சுயம்பு நாமத்து
அதிசயம் அடையக் கண்டார் அரசனுக் கறிவித்திட்டார்

முழுமதி தோன்றியதும் பொங்கும் அலைகடல் போல் மன்னன் மகிழ்ந்து, தனது கருவூலத்தைத் திறந்து விட்டு வாரி வழங்கித் தானம் செய்து, முறைதவறா ஆட்சி செலுத்தி வரும் காலத்தில் ஒருநாள் அந்த நகர் புறத்தேயுள்ள மலர் வனத்திலே 'சுயம்பு நாமர்' என்னும் தீர்த்தங்கர பகவானது சமவ சரணம் எழுந்தருளியதைக் கண்ட காவலர்கள் அரசனுக்கறிவித்தனர்.

57. விழுநிதி எளிதிற் பெற்ற வறியவன் போல வேந்தன்
எழுதரு விசோதி தன்னால் எழுந்து சென்று இறைஞ்சி வாழ்த்தி
முழுதுட னவர்கட் கீந்து முனிவர் தம்கோன் சிறப்புக்கு
எழுகென வீதிதோறும் இயம்பின முரச நின்றே.

அதைகேட்ட வேந்தன் பெருஞ் செல்வத்தை எளிதில் பெற்ற ஏழையைப் போல் மகிழ்ந்து, தூய நல்லுணர்வோடு தனது இருக்கையை விட்டு எழுந்து ஏழடி நடந்து சென்று திசைநோக்கி வணங்கி இறைவனை வாழ்த்தி அந்த நற்செய்தியை அறிவித்த காவலர்களுக்குத் தனது அணிகலன்களை வழங்கி, முனிவர்களுக்கெல்லாம் தலைமை எய்திய இறைவனைச் சிறப்புடன் வணங்க அனைவரும் புறப்படுமாறு தெருக்கள்தோறும் முரசுகள் முழங்கச் செய்தான்.

58. இடிமுர சியம்பும் எல்லை இந்திரன் நகரம் தன்னைப்
படிமிசை அணிந்து வைத்துப் படங்களைந் திட்ட வண்ணம்
கொடிநகர் அணிந்து பூணும் ஆரமும் குழையும் மின்னக்
கடிமலர்க் களபம் ஏந்திக் கணத்திடை எழுந்ததன்றே

இடியோசைபோல் முரசுகள் முழங்கியதைக் கேட்ட மக்கள் பல்வேறு கொடிகளையுடைய அந்த நகரத்தை அலங்கரித்த தோற்றம் இந்திரனது தலைநகரத்தை

அழகு செய்து அதை மூடிக்கொண்டு வந்து பூமியில் திறந்து வைத்ததைப்போல் விளங்கியது. நகரத்து மக்கள் தங்களைப் பொன்னணிகளாலும் மணி முத்து மாலைகளாலும் அலங்கரித்துக்கொண்டு காதிலே குழைகள் வீச நறுமணமலர்கள், சந்தனம் போன்ற பூசைக்குரிய பொருள்களை ஏந்தி விரைந்து புறப்பட்டார்கள்.

59. கால்பொரு கடலிற் பொங்கிக் கடிநக ரடையுமெல்லை
மாலையும் சாந்தும் ஏந்தி மயிலனார் சூழப் போகிக்
காலனைக் கடிந்த வேந்தன் கடிநகர்க் குறுகிக் கைமா
மேலிழிந் திறைஞ்சிப் புக்கான் விண்ணவர்க் கிறைவன் ஒத்தான்.

காவல்மிக்க அந்நகரமக்கள் காற்றினால் மோதப்பட்ட கடல் அலைகளைப் போல் திரண்டு புறப்பட்ட அதே நேரத்தில், அரண்மனையிலிருந்து மணம்மிக்க மலர் மாலைகளையும், நறுமணப் பொடிகளையும் ஏந்திய மகளிர் மயில் கூட்டம்போல் சூழ்ந்துவர யானை மீதமர்ந்த வேந்தன் உட்பட அனைவரும், கூற்றுவனை வென்ற வேந்தனாகிய அருக பெருமானின் சமவசரணத்தை நெருங்கினர்; யானையை விட்டிறங்கிய மன்னன் இந்திரனுக்கு நிகராகத் தோன்றினான்.

60. வானவில் கடந்து மான பீடத்தை வணங்கி வாழ்த்தி
மானதம் பத்தை எய்தி வலங்கொண்டு பணிந்துபோகி
மானமெல் லார்க்குமொத்து மலர்மலி கிடங்குபின்னா
மானமில் லாதவல்லி வனத்திடை மலர்க்கையேந்தி.

வானவில் போன்று ஒளியுடன் விளங்கிய 'தூளிசாலம்' என்னும் முதல் மதிலைத் தாண்டிச் சென்று அடுத்து அமைந்துள்ள பலிபீடத்தை வணங்கித் துதி செய்து அதை அடுத்த 'பிராசாத சைத்யம்' என்னும் இடத்தின் மையப்பகுதியில் விளங்கிய மானத்தம்பத்தை வலங்கொண்டு பணிந்து சென்று, வேறுபாடின்றி எல்லார்க்கும் ஒரே நீர் அளவைத்தருகின்ற மலர்கள் நிறைந்த அகழியையும் கடந்து அடுத்துள்ள மலர்க்கொடிகள் நிறைந்த 'வல்லிவனம்' என்னும் இடத்தில் தேவையான மலர்களைக்கொய்து கைகளில் ஏந்திய வண்ணம் சென்றனர்.

61. கோபுரம் சுரும்புண் சோலைக் கோபுரம் கொடியின் பந்தி
கோபுரம் காவும் செம்பொன் மாளிகைக் குழுவும் குன்றா
மாபுரி அனைய தூபை மணி முத்த மணலின் முற்ற
நூபுரத் தரவம் ஆர்ப்ப நுவலிய கடந்து புக்கான்.

அடுத்து 'உதயதர' மென்னும் மதிலிடை அமைந்த உதயதரமென்னும் கோபுரவாயிலின் வழியாகச் சென்று மலர்மரங்கள் நெருங்கிய 'வனபூமி' என்னும் பகுதியைக் கடந்து 'பிரீதிதர' மென்னும் மதில் அமைந்த 'பிரீதிதர' மென்னும் கோபுர வாயில் மூலம் சென்று உள்ளே பல்வேறு கொடிகள் அசைகின்ற 'கொடிநிலம்' என்னும் பகுதியைத் தாண்டிக் கல்யாண தரம் என்னும் மதிலை அதே பெயருடைய கோபுர வாயிலின் மூலம் உள்ளே சென்று கற்பகமரங்கள் நிறைந்த அகன்ற இடத்தைக் கடந்து செம்பொன்னால் அமைக்கப்பட்ட அளவற்ற மாளிகைகள் நிறைந்த 'கிரகாங்கண' பூமியையும் கடந்து மிக உயர்ந்த சிகரங்களையுடைய நகர் போன்ற மாளிகை முற்றங்களில் முத்துக்களையும், மணிகளையும் மணலாகப் பரப்பி ஆடும் அரம் பையரின் அடிச்சிலம்புகள் ஒலிக்கும் இடங்களையும் கடந்து மன்னன் சென்றான்.

62. பத்தொடு பதினா றாய பைம்பொன் நன்மணி யவற்றின்
சித்திரத் தியற்றப் பட்ட திருநிலை யத்தை எய்தி
மத்தமால் களிறு செம்பொன் மலையினை வலம்வந் தாற்போல்
தொத்தொளிர் மலர்கள் தூவிப் பலமுறை வலம் வந்திட்டான்.

பத்து மாற்றினையுடைய பசும் பொன்னிலே பதினாறு குணங்களையுடைய மணிகளைப் பதித்து அற்புதமாக அமைக்கப்பட்ட இறைவன் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ நிலையம் என்னும் ஆலயத்தை அடைந்து பொன் மலையை வலம் வருகின்ற யானையைப் போல் மலர்களைத் தூவிப் பலமுறை வலம் வந்தான்.

63. நிறைமதி கண்ட நீலமாக் கடல் போல் நீடாது
இறைவன துருவம் காணா வெழுதரு விசோதி தன்னால்
சிறையழி புனலிற் செல்லும் காதலனாகிச் சீர்சால்
துறவினுக் கிறைவன் தன்மேல் துதிவகை தொடங்கினானே.

ஆலயத்தே எழுந்தருளிய இறைவனைக் கண்டவுடன் நிறைமதியைக் கண்டு பொங்கும் கடல் போல் மகிழ்ந்து உள்ளத்தெழுந்த மெய்யுணர்வினால் அடங்கா ஆர்வத்தனாகி அணையை நீக்கிச் செல்லும் வெள்ளத்தைப்போல் விரைந்து சென்று மேலான முனிவர்களுக்கெல்லாம் இறைவனாகிய அருக பெருமானைப் போற்றித் துதிக்கத் தொடங்கினான்.

(வேறு)

64. பூமாலை முதலாய புனையாத திருமூர்த்தி
காமாதி வென்றுயர்ந்த கடவுளென் றறையுமே
காமாதி வென்றுயர்ந்த கடவுளென் றறைந்தாலும்
கோமான்நின் திருவுருவம் கொண்டுவப்பார் அரியரே.

மலர் மாலைகள் போன்ற எதையும் அணியாத உனது அழகிய திருமேனியானது ஆசை முதலிய அனைத்தையும் வென்றுயர்ந்த இறைவன் என்பதை எடுத்துக்காட்டும், உனது உடலுருவமே அவ்வாறு காட்டினாலும், இறைவனே உனது திருவுருவத்தை உளம்கொண்டு உன்னைப் போற்றி மகிழ்வார் மிகவும் சிலரே யாவர்.

65. விளக்ககத்துப் பளிங்கேபோல் விரிந்தொளிமூன் றுடைமேனி
அளப்பரிய ஒளியகத்துள் இருப்பதென் றறை யுமே
அளப்பரிய ஒளியகத்துள் இருப்பதென் றறைந்தாலும்
துளக்கறவென் றுயர்ந்தோயைத் தொழுதெழுவார் அரியரே.

விளக்கை அகத்தே கொண்ட பளிங்குபோல் விரியும் தன்மையுடைய மூன்று ஒளிகளைப் பெற்ற திருமேனியானது அளத்தற்கரிய ஆற்றல் மிக்க ஞான ஒளியானது அகத்தேயுள்ளது என்பதை அறிவிக்கின்றது உள்ளிருக்கும் ஒளியின் பெருமையை உடல் தெரிவித்தாலும் சலிக்காது மாறுபட்ட குணங்களை வென்றுயர்ந்த இறைவனாகிய உன்னைத்தொழுது உயர்வார் மிகவும் சிலரே யாவர்.

66. அமலமாய் அருள்சுரந்திட்டு அறிவரிய திருமூர்த்தி
விமலமாய் விரிந்தநால் குணத்தலைமை விரிக்குமே
விமலமாய் விரிந்தநால் குணத்தலைமை விரித்தாலும்
கமலமீ துலவுமுனைக் காதலிப்பார் அரியரே.

குற்றங்கள் நீங்கி அனைத்துயிர்களிடத்தும் அருள் பொழிந்து நிற்கும் உனது ஒப்பற்ற திருமேனியானது குறையேதுமின்றித் தன்னுள் நிறைந்து நின்ற நால் வகையான குறைவற்ற குணங்களின் ஆற்றலை அறிவிக்கும். அத்தகு ஆற்றலை அந்த அற்புதப் பொன்மேனி வெளிப்படுத்தினாலும் தெய்வத் தாமரைமேல் உலா வருகின்ற உன்னை விரும்பித் துதிப்பார் சிலரேயாவர் என்று போற்றித் துதித்தான்.

## தத்துவப் பொருள்

(வேறு)

67. என்று நின்று இறைவனை ஏத்தி மாதவத்து
ஒன்றிய மனத்தனாய் உலக நாதனை
நின்றதத் துவத்தது நீர்மை என்னெனக்
குன்றனாற் கருளினான் குற்ற மற்றகோன்.

இறைவனுக்கு எதிரே நின்று இவ்வாறு போற்றிப் புகழ்ந்த வைசயந்த வேந்தன் துறந்து தவமேற்கும் உள்ளத்தவனாய், உலகின் தலைவனாகிய இறைவனை வணங்கி, உலகத்தில் நிலைத்துள்ள உயிர் முதலிய ஒன்பது பொருள்களின் இயல்பு எத்தகையது என வேண்ட, குன்றுபோல் சலியாது நின்ற அவ்வேந்தனுக்குக் குற்றமற்றவரான சுயம்பு தீர்த்தங்கரர் உரைத்தருளினார்.

(வேறு)

68. உயிரும் உயிரல்லதும் புண்ணியம் பாவம்ஊற்றும்
செயிர்தீர் செறிப்பும் உதிர்ப்பும் கட்டும் வீடும்உற்ற
துயர்தீர்க்கும் தூய நெறியும் சுருக்காய் உரைப்பன்
மயல்தீர்த்த காட்சியுடையோய் இதுகேள் மதித்தே

'உயிர், உயிரல்லது, புண்ணியம், பாவம், ஊற்று, குற்றமற்ற செறிப்பு, உதிர்ப்பு, கட்டு, வீடு இவற்றைப் பற்றியும், இல்லற உயிர்களிடம் பொருந்திய துயரத்தைக்கெடுத்து முக்திக்குச் செலுத்தும் தூய நெறியாகிய மும்மணிகளைப் பற்றியும் சுருக்கமாகக் கூறுவேன் கவனமாகக் கேட்பாயாக.

69. அறிவு காட்சியதாய் ஐந்தும் மூன்றும்அம்
பொறியோடு உட்கரணத்து உயிர்ப்பு ஆயுஇந்
நெறியின் வாழும் பொருளது சீவனாம்
அறியின் வீட்டது மாற்றதும் ஆகுமே.

உயிரானது வீட்டுயிர் மாற்றுயிர் என இருவகைப்படும். அவற்றுள் வீட்டுயிரானது அறிவுமயமானது காட்சிமயமானது. மாற்றுயிரானது ஐம்பொறிகள், மூன்று உட்கரணங்கள், உயிர்ப்பு, ஆயுள் என்னும் பத்து வகையான பிராணங்களில் பிறவிநிலைக் கேற்றவாறு நான்கு முதல் பத்துப் பிராணன்களைப் பெற்றதாகும். (வீட்டுயிர்-மோட்ச ஜீவன், மாற்றுயிர்-சம்சார ஜீவன்).

70. வீட்டில் நின்றது வெவ்வினை எண்மையின்
கேட்டில் எண்குணம் எய்திஓர் கேடிலா
மாட்சியால் உல கந்தொழ மாற்றற
ஓட்டி வைத்தசெம் பொன்னொத் தொளிருமே

மேலும் வீட்டுயிரானது எண்வகைக் கொடிய வினைகள் கெட்டு ஒழிந்தவுடனே எப்போதும் அழிவற்ற எண்வகைக் குணங்களை எய்திய மாட்சியினால் உலகிலுள்ள உயர்ந்தவர்கள் தொழுது நிற்க நெருப்பிலே புடம்போட்டுக் களங்கம் நீக்கப்பட்ட பொன்னைப்போல் வீட்டுலகில் நிலைத்து ஒளிரும்.

71. மாற்றில் நின்றது வையகம் மூன்றினும்
ஆற்ற வும்பரி யட்டமோர் ஐந்தினால்
தோற்றம் வீதல் தொடர்ந்திடை யில்வினைக்
காற்றி னால் கதி நான்கிற் சுழலுமே

மாற்றுயிரானது (பிறவியில் உழலும் உயிர்) ஐந்து பரியட்டம் என்னும் பிடிப்புக்களில் சிக்குண்டு மூன்று உலகங்களிலும் கணக்கிலடங்காத பிறப்பு இறப்புக்களை எய்தி வினைக் காற்றினால் நான்குகதிகளில் உழன்று கொண்டிருக்கும் (பரியட்டம் ஐந்து-பொருள், இடம், காலம் எண்ணம் தோன்றி மறையும் செயல்).

72. மானு டம்பு விடாகதி நான்கெய்தும்
ஈன மில் விலங் கிலுமோர் நான்கெய்தும்
வானின் வந்து விலங்கு மனிதனாம்
ஈன மில்லவை எய்திடும் நாரகன்.

மனிதப் பிறவியிலுள்ள உயிரானது அது நீங்கிய பின் நான்கு கதிகளில் ஏதேனும் ஒன்றை எய்தும்; விலங்குப் பிறவிகளிலுள்ள சிந்திக்கும் ஆற்றல் பெற்ற உயிர்களும் நான்குகதிகளில் ஒன்றை அடையும்; தேவப் பிறவியிலுள்ள உமிர்கள் அடுத்த பிறவியில் விலங்காகவோ, மனிதராகவோ பிறக்கும் வாய்ப்பினைப் பெறும்; நரக உமிர்கள் அடுத்த பிறவியில் மனிதராகவோ, விலங்காகவோ தோன்றும்.

(வேறு)

73. நாலறி யீறு நான்கும் நரகரும் தேவர் தாமும்
மாலுறு போக பூமி மக்களும் விலங்கு மாகார்
மேலுற வான தாதி தேவர்கள் விலங்கின் வாரார்
சாலவீ சானன் மேலார் ஈரைவர் சன்னி யாவார்.

ஒன்று முதல் நான்கு அறிவினையுடைய நால்வகை உயிர்களும் நரக உயிர்களும் தேவர்களும் அடுத்த பிறவியில் விரும்பத்தக்க போக பூமியில் மனிதர்களாகவோ, விலங்குகளாகவோ பிறக்கமாட்டார்கள்; பதின்மூன்று முதல் பதினாறுவரை உள்ள உயர் கல்பங்களைச் சேர்ந்த தேவர்களும் அகமிந்திரர்களும் அடுத்த பிறவியில் விலங்காகப் பிறக்கமாட்டார்கள், மனிதர்களாகவே பிறப்பார்கள் சௌதர்ம ஈசான கல்பங்களுக்கு மேலே உள்ள மூன்றுமுதல் பன்னிரண்டு வரையிலுள்ள கற்பவாசி தேவர்கள் மனமுடைய உயர் பிறப்பிலே தோன்றுவர்.

74. நீர்மர நிலங்க ளாவர் நின்றநால் வகைய தேவர்
நீர்மர நிலங்கள் செல்லும் விலங்கொடு மக்கள் தம்மிற்
சீர்மையில் விலங்குமக்கள் தீயொடு வளியும் ஆவர்
நீர்மையின் நெருப்பிற் காற்றின் நின்றன விலங்கிற் றோன்றும்.

கீழ் இருக்கின்ற நால்வகைத் தேவராகிய பவண வியந்தர ஜோதிட வைமானிக தேவர்களும் தங்கள் தேவவாழ்வு முடிந்ததும் நீருடலி, மர உடலி, நில உடலி ஓர் புலனுயிர்களாகப் பிறப்பர்; நீர், நிலம், மரங்களின் உயிர்கள் மடிந்தபின் மனித விலங்குப் பிறவிகளைப் பெறும்; சிறப்பில்லாத மக்களுயிரும் விலங்குயிரும் நெருப்புடலி, காற்றுடலி ஓர் புல நுண்ணுயிர் விலங்குகளாகவே பிறக்கும். (மனிதப் பிறவியில் தோன்றா).

75. அருகன துருவ மில்லார் அகமிந்தி ரத்துள் தோன்றார்
அருமையிற் சாச ராந்த மடைவரா சீவ ரன்றிப்
பிரமனை அந்த மாகப் பரிப்பிரா சகரும் செல்வர்
மருவுவர் சோதி டாந்தம் மற்றத் தாபதர்க டாமே.

முற்றும் துறந்து நிர்வாண நிலையில் தவம் செய்யாதவர்கள் அகமிந்திர உலகமாகிய நவக்கிரைவேயகம், நவாணுதிசை முதலியவற்றில் பிறக்கமாட்டார்கள்; மிகவும் முயன்று தவம் செய்கின்ற ஆசிவர் என்னும் பிரிவினர் சாசராந்தம் சகஸ்ராரம் என்னும் கல்பங்களில் பிறப்பார்கள், பரிப்பிராசகர் என்னும் ஒரு வகைத் துறவிகள் பிரம்ம கல்பம் வரையிலும் செல்வர், மற்ற போலித் துறவிகள் அனைவரும் கீழ்முத்தேவர்களாகத்தான் தோன்றுவார்கள். (ஆசிவர்-சுவேதாம்பரர்).

(வேறு)

76. நற்காட்சியுடை விலங்கும் மானிடரும் வதம்செறிந்தும்
கற்பாதி முதலாகக் கற்பாந்த முறச்செல்வர்
நற்பால வதம்செறிந்த நரர்விலங்கு பவனாதி
கற்பாந்தம் சாசராந்தம் காண்பர் முறையுளியே.

நற்காட்சியினையுடைய விலங்குகளும், மனிதர்களும் அணு விரதங்கள் ஐந்தினை மேற்கொண்டாலும் கொள்ளாது போயினும் சௌதர்ம கல்பம் முதலாக அச்சுத கல்பம் வரையிலும் அவரவர் தகுதிக்கேற்ப அடைவார்கள்; அணு விரதத்தை மட்டும் ஏற்றுள்ள மனிதர்கள், பவணலோகம் முதல் அச்சுத கல்பம் வரையிலும், விலங்குகள் சகஸ்ரார கல்பம் வரையிலும், முறைப்படி அடைவார்கள்.

77. போகநில விலங்குநரர் பொருந்திய நற்காட்சியரேல்
நாகமுதலாம் சோதம் ஈசான நண்ணிடுவர்
மோகமிச்சார் பவணர் வியந்தரர்சோ திடராவார்
ஆகுபவர் அணுதிசாணுத் தரத்தைய மறத்தெளிந்தார்.

போக பூமியிலுள்ள மக்களும் விலங்குகளும் நற்காட்சியுடையவர்களாக இருப்பின் முதல் இரண்டு கல்பங்களில் பிறப்பார்கள்; அதே பூமியிலுள்ள ஆசைமிக்க மாறுபட்ட அறத்தை மேற்கொண்டவர்கள் கீழ்முத் தேவர்களாகப் பிறப்பார்கள்; ஐயமறத் தெளிந்த மெய்யுணர்வுடையவர்கள் அடுத்த பிறவியில் அகமிந்திர லோகமாகிய நவாணுதசை பஞ்சாணுத்தரத்தில் சென்றடைவார்கள்.

78. மீன் ஆணும் பெண்ணு நாற்காலும் காலிலவும்
வான்மேல் வருவ தவழ்வ குறியிலவும்
மேன்மேல ஏழ்நரகின் கீழ்ச்செல்லா மேற்செல்லும்
மேனான்கு வீடுதவம் விரதம் விலங்காம் முறையே.

குறிப்பிட்ட மிப்பெரிய மீன் இனங்களும், கொடிய ஆடவர்களும் ஏழாவது நரகம் வரையிலும், பெண்கள் ஆறாவது நரகம் வரையிலும், நான்கு கால்களையுடைய விலங்குகள் ஐந்தாம் நரகம் வரையிலும், பல்வேறு பறக்கும் உயிரினங்கள் மூன்றாம் நரகம் வரையிலும் சென்று பிறப்பெய்தும்; தவழ்ந்து செல்லும் உயிர்கள் இரண்டாம் நரகத்திலும், மனமில்லாதன முதல் நரகத்திலும் பிறப்பெய்தும்; மீண்டும் ஒன்று முதல் நான்கு நரகங்களில் உள்ள உயிர்கள் அடுத்த பிறவியில் மனிதராகப் பிறந்து தவம் செய்து வினைகளை வென்று வீடுபெற்றாலும் பெறும்; அடுத்த ஐந்தாவது நரகத்திருந்து வந்து மனிதராகப் பிறந்தாலும் வீடு பேறடையா ஆறாவது நரக உயிர்கள் விலங்காகவோ மக்களாகவோ பிறந்து ஏகதேச விரதம் ஏற்கலாம்; ஏழாவது நரகத்திலிருந்து வரும் உயிர்கள் மனிதர்களாகப் பிறக்காது, விலங்குகளாகத்தான் பிறப்பார்கள்.

79. இந்தியம் ஒன்றினால் உலக மெங்குமாம்
ஐந்தினால் நாளிகை யகத்து வாழுமே
அந்தினோ டிரண்டரைத் தீபம் ஆழிமூன்று
இந்திய நான்கு மூன்றிரண்டின் எல்லையே.

ஓரறிவு உயிர்கள் உலகத்தின் அனைத்து இடங்களிலும் நிறைந்துள்ளன. உலகின் மையத்தில் நாளிகை என்னும் பகுதியில் ஐந்தறிவு உயிர்கள் வாழும், உலகின் இறுதியிலுள்ள 'சுயம்புரமணம்' என்னும் தீவிலும், இரண்டரைத் தீவிலும், 'மகாலவணம்', 'காளோதகம்', 'சுயம்புரமணம்', என்னும் கடல்களிலும் ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு உயிர்கள் வாழும்.

80. இரண்டரைத் தீவினுள் மனிதனாம் கண்டம்
திரண்ட நூற்றெழுபதில் திருவறந்தனாம்
முரண் கெடக் குலங்களோர் மூன்றில் தோன்றினால்
திரண்டதீ வினையடாச் சித்தி யெய்துமே.

மக்கள் இரண்டரைத் தீவினுள் மட்டுமே பிறப்பார்கள். அதிலும் திரண்டுள்ள நூற்று எழுபது தர்ம கண்டங்களில் திருவறத்தை மேற்கொள்ளும் மக்கள் பிறப்பர்; அங்கேயும் மன்னர், அந்தணர், வணிகர் என்னும் முப்பிரிவில் பிறப்பவர்கள் தமது உயிரைச் சேர்ந்த வினைகளைக் கெடுத்து முக்தியும் அடைவார்கள்.

81. குடங்கையில் விளக்கெனக் கொண்ட கொண்டதன்
உடம்பின தளவுமாம் உலக மெங்குமாம்
ஒடுங்குழி புரைதரங் கில்லை ஓங்கிய
இடங்கொளிற் பிளத்தலும் இன்று அமூர்த்தியால்.

அகங்கையில் விளக்கை வைத்து மூடினால் அதன் ஒளி கைக்குள் இருக்கும் இடத்தின் அளவு மட்டுமே பரந்து ஒளி வீசுவதுபோல் உயிரானது தான் எந்தச் சிறிய உடலை ஏற்றாலும் அதற்கேற்ற அளவாகவும், மிகப்பெரிய உடலில் இருக்கும்போது அதன் அளவிற்கும் இருக்கும்; சிறிய உடலில் சுருங்குவதும், பெரிய உடலில் விண்டு விரிவதும் இல்லை. கேவலிகளின் உயிரானது (சில சமயத்தில்) உலகளவு பரவி நிற்கும் ஆற்றலுடையது.

## உயிர்

82. பொறிகளால் புலத்தெழு போகம் துய்ப்புழி
இறுகிய வினைகளுக்கு இறைவ னாயபின்
பிறிதொரு பிறப்பினவ் வினைப் பயத்தினுக்கு
இறைவனாம் இதுவுயிர் இயற்கை வண்ணமே.

உயிரானது ஐம்புல இன்ப துன்பங்களைப் பொறிகளால் துய்க்கின்ற காலத்தில் அது தொடர்பாகத் தன்னுடன் வந்து சேர்ந்த வினைகளுக்கு உரியவனாகிறது. அப்படி ஏற்ற வினைகளின் பயனை மற்றொரு பிறவியில் தானே அனுபவிக்கிறது. இந்தச் செயல்தான் உயிரின் இயல்பான தன்மையாகும்.

## உயிரல்லவை

(வேறு)

83. நாற்றமும் சுவையும் ஊறும் வண்ணமும் தன்மைத்தாகிப்
போற்றல் பூரித்தல் வாடல் உடையதாப் புற்கலந்தான்
மாற்றிடை யுயிரைப் பற்றி வினைமுத லாகித் துன்பம்
ஆற்றவும் செய்து கந்தம் அணுவுமாய் நிற்ப தாமே.

உயிரின் மாறுபட்ட புற்கலப் பொருளானது, நாற்றம், சுவை, ஊறு, வண்ணம் முதலிய தன்மைகளைப் பெற்று மற்றும் சேர்தல், முழுமை எய்துதல், பிரிதல் ஆகிய செயல்களை உடையதாய்ப் பிறவியில் சுழலும் உயிர்களைப் பற்றிக்கொள்ளும் வினைகளுக்கு மூலப் பொருளாக அமைந்து, மிக்க துன்பங்களைக் கொடுத்து-கந்தங்களாகவும், அணுக்களாகவும் ஆகும் தன்மையுடையதாம்.

(வேறு)

84. நுண்மையு நுண்மையு நல்ல நுண்மையு
நுண்மையிற் பருமையும் பருமை நுண்மையும்
எண்ணரும் பருமையும் இரு பருமையும்
கண்ணுறும் அணுவின ஆறாகும் கந்தமே.

உள்ளத்தால் மட்டுமே உணர்ந்து அறியக்கூடிய அணுவினாலாகிய கந்தமானது ஆறுவகைப்படும். அவை, நுண்மையுள் நுண்மை, நுண்மையிற் பருமை, பருமையிற் நுண்மை, பருமை, பருமையிற் பருமை என்பதாம்.

85. கருமத்தின் கீழன கரும நோகமம்
பெரியவா நோகமம் பொறிகொ ளாதன
ஒருபொறி புலத்தன பலபு லத்தன
கருதிய அறுவகைக் கந்த மாகுமே.

முன்பு கூறப்பட்ட ஆறுவகை கந்தங்கள் மேலும் வேறுவிதமாகக் கூறப்படும். வினைகளை ஆக்க முடியாத நுண்ணிய கந்தம், வினைகளை ஆக்கும் கந்தம், நோகரும கந்தம், பெரிய நோகரும கந்தம், (என்னும் இவைகள் நான்கும் வினைகள் தொடர்பானவை) ஒரு பொறிக்கு மட்டும் காரணமானவை, பல பொறிகளுக்குக் காரணமானவை (இவை இரண்டும் பொறிகள் தொடர்பானவை).

(வேறு)

86. ஊறிரண்டாகி நாற்றம் வண்ணமும் சுவையும் ஒன்றாய்க்
சூறிரண் டாக்க லாகா நுண்மைத்தாய் அளவைக் கெல்லாம்
பேறுதன் வழிய தாகிப் பிறங்கிமூ வுலக முற்றும்
ஆறுகந் தங்கட் காதி யாகிய தணுவ தாமே.

பரமாணுக்கள் இரண்டு வகையான ஸ்பரிசமும், ஒவ்வொரு வண்ணம், நாற்றம், சுவையும் உடையதாய் மேலும் பகுதிப்படுத்த முடியாத நுண்மையானதாய்ப் பொருள், இடம், காலம், சிந்தனை அளவைகள் அமைவதற்குக் காரணமாகி முன்பே கூறப்பட்ட ஆறு கந்தங்கட்கும் காரணமாகி மூவுலகத்தின் முழுவதிலும் நிறைந்து கிடக்கும்.

(வேறு)

87. கரும நல் லுபசயம் காய நோகமம்
மருவிய புலம்வத்து போகம் காரணம்
இருள்வெயில் ஒளிஒலி நிழல்நாற் பூதமாய்த்
திரிவுடைப் புற்கலம் தான் அசீவனே.

காதி அகாதி கர்மங்களும், உறுப்புக்கள் துணை உறுப்புக்களும், ஐந்து வகையான உடல்களும், பல்வேறு நோகர்மங்களும், ஐம்பொறிகளின் தொடர்பான புலன்களும், ஐம்பொறிகளும், போக உபயோகப் பொருள்களும், அறம், பொருள், இன்பப் பொருள்களும், இருள், வெயில், ஒளி, ஒலி நிழல் போன்றவைகளும் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய பூதங்களும் ஆகிய பொருள், குணம், செயல் கூடிய இப்புற்கலங்கள் 'அசீவன்' எனப்படும்.

88. அத்தியாய் அமூர்த்தமாய் அளவில் தேசியாய்
ஒத்தள வுலகினோடு உலக லோகமாம்
தத்துவம் தனைச்செய்து தன்ம தன்மமா
மத்திகள் செலவொடு நிலையிற் கேதுவாம்.

அழிவற்றதாய், உருவமற்றதாய் மிகப் பரந்ததாய், தான் இருக்கும் இடமே உலகம் தான் இல்லாத இடம் அலோகம் என்னும் நிலையை அமைத்து உயிர்-புற்கலம் இவைகளின் இயக்கத்திற்கும், இருப்பிற்கும் காரணமாவன தர்மம், அதர்மம் ஆகிய இரண்டுமாம்.

89. அளவதாம் பொருளுல கத்துக் கில்லையேல்
அளவிலா காயத்தில் அணுக்களோ டுயிர்
அளவளா வின்றியே யகன்று போயபின்
உளவல கட்டுவீ டுலகத் தோடுமே.

தர்மம் அதர்மம் என்னும் இவை இரண்டும் இல்லையேல் மிகப் பரந்த ஆகாயத்தின் கண் அணுக்களாலமைந்த கர்மங்களுடன் உயிரானது சேர இயலாது, அகன்று செல்லுமாதலால் உலகம், வாழ்க்கை, வீடு இவையனைத்தும் இல்லாது போகும்.

90. அச்சுநீர் தேரொடு மீனை யீர்த்திடும்
அச்சுநீர் இன்றியே தேரு மீன்செலா
அச்சுநீர் போல தன்மத்தி சேறலை
இச்சையும் முயற்சியுமின்றி யாக்குமே.

தேர் செல்வதற்கு அச்சும், மீன் நீந்துவதற்கு நீரும் துணையாகும், அச்சு இல்லாமல் தேரும், நீர் இல்லாமல் மீனும் இயங்க இயலாது. அதுபோல தர்மம் என்னும் அத்திகாயம் எல்லாவற்றையும் இயங்கத் துணை; அதர்மாத்திகாயமானது பொருள்கள் நிலைத்திருப்பதற்குத் துணையாகிறது (ஆனால் இவை இரண்டிற்கும் பொருள்கள் இயங்குவதிலோ, நிற்பதிலோ ஆர்வமோ முயற்சியோ கிடையாது) இவை நிமித்த காரணங்களே.

91.	அந்தரத் தறுபத்து மூன்ற தாகிய
இந்திர படலமும் நிரயம் ஏழ்களும்
மந்தரமலை மண்ணு மற்று நின்றிடா
அந்தமில் நிலைய தன்மத்தி யில்லையேல்

அதர்மாத்திகாயம் இல்லையேல் விண்ணகத்திலுள்ள அறுபத்து மூன்று விண்ணுலகப் பிரிவுகளும், ஏழு வகையான நரகங்களும் மேரு உட்பட அனைத்து மலைகளும், இம்மண்ணுலகமும் மற்றுமுள்ள எல்லா பொருள்களும் நிலை பெறமாட்டா.

92.	பறவைகளின் சிறகொடு பாத நின்றுழி
நெறியினால் செலவொடு நிலையை யாக்குமால்
உறவிபுற் கலமிவை யோடல் நிற்றலைச்
செறிவுறித் தம்ம தம்மத்தி செய்யுமே.

ஒரு பறவையின் இறகுகள் பறப்பதற்கும் அதன் கால்கள் நிற்பதற்கும் பயன்படுவதுபோல உயிர், புத்கலம், என்னும் அனைத்தும் இடம் விட்டுப் பெயர்ந்து செல்லவும் ஓரிடத்தில் இருக்கவும் தர்ம அதர்மத்தி காயங்கள் துணையாக இருக்கும்.

## ஆகாயம், காலம்

93.	அளவின்றி அத்தியாய் அமூர்த்தி ஆதியாய்
உளவென்ற பொருட்கெலா மிடங்கொடுத்துடன்
தளர்வின்றி நிற்ப தாகாயம் சார்வினால்
அளவிலாக் காலத்தோடு அசீவன் ஐந்துமே.

எப்போதும் நிலைத்துள்ளதாய் மிகப் பரந்ததாய் உருவமற்றதாய் இலேசாகவோ கனமாகவோ இல்லாததாய் உலகில் உள்ள உயிர் முதலான பொருள்களுக்கெல்லாம் இடம் கொடுத்துச் சற்றும் சோர்வில்லாமல் நிற்பது ஆகாயம் எனப்படும் மற்றும் முன் சொன்ன அனைத்துடன் தொடர்பு கொண்டிருப்பது காலம் எனப்படும். இந்தப் புற்கலம், தர்மம், அதர்மம், ஆகாயம், காலம் என்னும் இவை உயிரற்ற ஐந்து பொருள் எனப்படும்.

(வேறு)

94.	கணம்வளி உயிர்ப்புத்தோவம் இலவமே நாளி மூழ்த்தம்
இணையினாள் பக்கம் திங்கள் இருதுவே அயனம் ஆண்டு
பணையுகம் பூவம் பல்லம் பவ்வமே அனந்த மீறாக்
கணமுதற் காலபேதம் சொல்லுறிற் கால மில்லை.

கணம், வளி, உயிர்ப்பு, தோவம், இலவம், நாழி, மூழ்த்தம், நாள், பக்கம், திங்கள், இருது, அயனம், ஆண்டு, பணை, யுகம், பூவம், பல்லம், கடல், அனந்தம் என்பன கால அளவுகளாகும். கணத்துக்குக் குறைந்த காலமும், அனந்தத்திற்கு மேற்பட்ட காலமும் இல்லை.

## புண்ணியம்

95.	அருள்தெளி யார்வம் சிந்தை அழகிய நிகழ்ச்சி ஞானம்
பொருவரு தவத்தி னாலும் புனிதனாம் உயிரைப் புக்கு
மருவிய வினைகள் மாற்றாம் மாசினைக் கழுவி வீட்டைத்
தருதலாற் புனிதமாகும் தன்மையாற் புண்ணிய மாமே.

அருள், இன்ப துன்பங்கள் இயல்பென்ற தெளிவு, நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகிய மும்மணிகளில் ஆர்வம், உயிர்களுக்கு நலம் தரும் செயல்களை மேற்கொள்ளல், மெய்யறிவைப் பெறுதல், ஒப்பற்ற தவத்தை மேற்கொள்ளல், தூய சிந்தனை ஆகியவற்றையுடைய உயிர்களைச் சேர்ந்த நல் வினையானது பிறப்பு இறப்பு என்னும் துயரக் களங்கத்தைப் போக்கி வீடுபெறத் துணை நிற்பதாம். சிறந்த செயல் உருவாகிய இவை இருவகைப்படும். பாவ புண்ணியம் திரவிய புண்ணியம் என.

## புண்ணியத்தின் பலன்கள்

96. சாதமே புருச வேதம் சம்மத்தம் தக்க நாமம்
கோதமே லாய தேவர் மானவ ராயு வாழும்
போதமே பொருளோ டின்பம் புகழ்ச்சிமீக் கூற்ற மன்னர்க்கு
ஆதியாம் தன்மைநல்கி அறவர சாக்கும் மன்னா

வேந்தனே! மேலே கூறிய நல்வினையானது மேலும் புண்ணியத்தினையும், ஆண் பிறப்பினையும், நல்லறிவினையும் எழில் உருவத்தையும், உயர் நலத்தையும், தேவ மனிதப் பிறவிகளையும் மெய் ஞானத்தினையும், புகழையும், மேன்மையையும், மன்னர் மன்னனாகும் வாய்ப்பினையும் முறையாகக் கொடுத்து இறுதியில் தர்மத்தின் தலைவன் எனப்படும் அருக பெருமானாகவும் துணைபுரியும்.

## ஊற்று

97. காதியும் கருணை யின்மை ஆதியால் கட்டி நின்ற
வேதனை முதல வெல்லாம் வெந்துயர் விளைக்கும் பாவம்
ஓதிய இரண்டும் யோகின் உயிரினை உறுதல் ஊற்றாம்
தாதுறக் காய்ந்த போழ்தின் தானுறு நீரை ஒத்தே.

கொடிய வினைப் பயனாலும், அருளற்றதன்மை முதலாகிய (95 ஆம் செய்யுளில் கூறிய) தன்மைகளுக்கு மாறுபட்ட நிலைகளாலும், மேலும் தீவினையைச் சேர்த்து நரகத்தே செலுத்தும் தன்மையுடையது பாபமாகும், கூறப்பட்ட புண்ணியம், பாபம் இரண்டும் நெருப்பிலே நன்கு காய்ந்த இரும்பைச் சேர்ந்த நீர் போல், சிந்தனை, சொல், செயல்களின் மாறுபட்ட தன்மையினாலே உயிரை அடைதல் ஊற்று எனப்படும்.

98. ஈனமே அதிகம் ஈரா பதகமே சாம்ப ராயம்
ஞானமே ஞான மின்மை நல்லவாம் புண்ணிய பாவம்
தேனுலாம் அலங்கல் வேந்தே தவியமே பாவமென்று
தானெலா உயிர்க்கும் ஆகும் ஊற்றிவை தாம்பத் தாகும்.

தேன்மிக்க மலர் மாலையணிந்த வேந்தனே! அந்த ஊற்றானது ஈனம், அதிகம், ஈர்யாபதம், சாம்பராயம், ஞானம், ஞானமின்மை, நல்ல புண்ணியம், பாபம், திரவியம், சிந்தனை என்னும் பத்து வகையும் மாற்றுயிர்களை அடையக் கூடியதாம்.

## செறிப்பு

99. கோபனம் சமிதி தம்மம் சிந்தை ஈராற டக்கம்
தாபனம் பரிசை வெல்லும் தன்மையால் முனிவன் நின்றால்
வேபமொன் றிலாத சிந்தை வினைவழி விலக்கி நிற்கும்
தீபநின் றகத்தைச் சேரும் இருளுண்டோ செறிப்பி தாமே.

மூவகை குப்தி, ஐவகை சமிதி. பத்து அறங்கள், பன்னிரு சிந்தனைகள், பன்னிரண்டு அடக்கங்கள், பன்னிரு தவங்கள், இருபத்திரண்டு துன்பங்கள் பொறுத்து வெல்லுதல் ஆகியவற்றை ஏற்றுத் தியானம் செய்தலா, சலனமற்ற நிலையான அந்தத் தியானத்தின் பயனாக வினைகள் வரும்வழி தடை செய்யப்படும், ஒளிமிக்க விளக்கின் முன் இருள் நில்லாததைப்போல் கர்மங்கள் விலகிச் செல்லும், இதுதான் செறிப்பு எனக் கூறப்படும்.

100. நின்ற அந்தத்தின் மூன்று நினைப்புணர் உதிர்ப்பை ஆக்கும்
முன்பு சென் றுயிர்க்க ணின்ற வினையின்கண் மூழ்த்தம் ஆதி
நின்ற அத் திதியி னோடு பயன்செய்யும் ஆற்றல் உய்க்கும்
ஒன்றிய வகையி னாலே கணந்தொறும் உருவத் தாரோய்.

முன் செய்யுளின் இறுதியில் கூறிய பன்னிரு அடக்கம், பன்னிரு தபம், இருபத்திரண்டு துன்பம் பொறுத்து வெல்லுதல் ஆகியவற்றோடு தரும சுக்கிலச் சிந்தனைகளும், மிகச் சிறந்த மெய்யுணர்வும் ஒருங்கிணையின் முற்பிறவியில் உயிருடன் கலந்து நின்று பயன்தரக் காத்திருக்கும் ஞானாவரணாதி கர்மங்கள் ஒவ்வொரு கணமும் கழியும்.  இதை உதிர்ப்பு என்போம்.

101. அனந்தமாம் அணுக்கள் கூடி அங்குலி அயங்கம் பாகில்
குணங்களால் செறியக் கட்டிக் குணங்களோடு ஆற்றல் மூன்றில்
தணந்திடாது அயங்க லோக பதேசமாம் சமய காலம்
அனந்தமா லோகமெல்லாம் வர்க்கணா ரூபத் தாலே.

அங்குலியின் (கட்டை விரலின்) அஸங்க்யாத பாகம் ஒன்றில் அனந்த பரமாணுக்கள் ஸ்நிக்த ரூக்ஷ குணங்களால் நெருங்கப் பொருந்த நிற்பது கார்மணவர்க்கணைகள்; அவை வண்ணம் முதலான குணங்களோடு மூன்று ஆற்றல்களில் (ஸ்வபாவம், உபலப்தி, ஸம்ஸ்காரம்) தளராமல் நிற்கும்; அப்படி நிற்கும் காலம் உயர்ந்தளவு (உலக) அஸங்க்யாதமும் குறைந்தது ஒரு சமயமும் ஆகும்.  இக் கார்மணவர்க்கணைகள் உலகம் எங்கும் அனந்தம் கணக்கில் இருக்கின்றன. (இது கர்ம பிரகிருதி பந்தம்).

102. யோகமே பாவந் தானும் உடன் நின்ற உயிரின் யோகின்
வேகந்தான் மூலமாகி விகற்பமாய் விரிந்த கந்தம்
யோகத்தால் உயிர்ப்ப தேசத்து ஒழிவின்றி ஒப்பச் சென்றால்
பாகமுந் திதியும் மோக பாவத்தாற் பந்த மாமே.

மன வசன காய பாவ பரிணாமத்துடன் கூடிய உயிரது அம் மூன்று யோகத்தின் தீவிரம் காரணமாக பல வகையாகப் பிரிந்து நிற்கும் முன் சொன்ன கர்ம பிரகிருதிகள், உயிரது மன வசன காய யோகத்தால் பாலும் நீரும்போல உயிரிடத்து அவை இடையறாது ஒன்றி நிற்கும் (இது பிரதேச பந்தம்); உயிரது மோக பாவத்தால் அனுபாக பந்தமும் ஸ்திதி பந்தமும் ஆகும்.

103. ஏழுமூன்று இரண்டு பத்தால் எறிந்தன கோடா கோடி
ஆழிகள் ஆகும் ஆன்ற நிலையல்ல தந்த மூழ்த்தம்
மோழை மோவத்தி னுக்கு முதல்மும்மை ஈற்றி னுக்கும்
ஆழிய நாம கோதத் தாயுமுப் பத்து மூன்றே.

அறியாமையால் தோன்றி மோகனீய கர்மம் எழுபது கோடாகோடி கடற்காலமும், ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதனீயம், அந்தராயம் ஆகிய நான்கு கர்மங்கள் முப்பது கோடாகோடி கடற்காலமும், நாமகர்மம், கோத்திரகர்மம் இவை இரண்டும் இருபது கடற்காலமும், ஆயுள் கர்மம் முப்பத்து மூன்று கடற்காலமும் உடைய உயர்ந்த அளவினதாம், குறைந்த அளவு ஒவ்வொன்றிற்கும் ஒரு முகூர்த்த காலதிற்குட் பட்டதாகும். இடைப்பட்ட காலம், உயர்ந்த குறைந்தகால அளவிற்கு இடைப்பட்ட பல்வேறு கால அளவினதாம்.

104. நஞ்சென உறைக்கும் பாவம் நல்வினை நாவில் இட்ட
அம்சுவை அமிர்தம் போல இன்பத்தை ஆக்கும் ஆற்ற
புஞ்சிய பந்த சந்த உதயமோ டுதிர்ச்சி யாக்கி
அஞ்சினால் உதயம் செய்திட்டு அப்பயன் ஆக்கும் மன்னா.

பாவத்தினால் வரும் துன்பம் நாவிலே நஞ்சையிட்டது போன்ற கொடியதாகும், புண்ணியத்தினால் பெறும் பயன் நாவிலே அமுதத்தை இட்டதற்கு ஈடாகும், மிகுதியான கர்மமானது உயிருடன் இறுகி, அமைதியாகக் கிடந்து, பயன் தந்து உதிர்ந்து போவதாம்; பொருள், இடம், காலம், தோற்றம், எண்ணம், என்னும் ஐந்தின் மூலமாக வெளிப்பட்டுப் பயன் தரக்கூடியதாம்.

## வீடு

105. யோகமே பாவந் தம்மால் உயிரினை ஆர்த்த கம்மம்
யோகமே பாவந் தாம்வந் துயிரினை யுற்ற போழ்தின்
யோகமே பாவந் தாமும் உயிரின்கண் விடுத்தல் வீடாம்
யோகமே பாவந் தம்முள் உவந்தெழும் அரச வென்றான்.

தூய எண்ணம், சொல், செயல் மற்றும் தீய எண்ணம், சொல், செயல் இவைகளினால் உயிரை இறுகிய புண்ணிய பாப கர்மங்கள் பிறிதொரு பிறப்பில் அதே மனம், மொழி, செயல் இவற்றில் மிகத் தூய நிலை தோன்றியபோது மனம், சொல், செயலால் சேர்ந்த வினைகள் கழிவது பாவ மோட்சத்திற்கு வழி வகுக்கும். எனவே வேந்தனே! கர்மங்கள் கழிவதற்குக் காரணமான தூய சிந்தனை, சொல், இவற்றில் ஆர்வம் கொண்டு செல்வாயாக.

106. வினையற விட்ட போழ்தின் வெடித்த வேரண்டம் போல
நினைவரும் குணங்கள் எட்டும் நிறைந்துமேல் நோக்கி ஓடி
முனிவரும் உலகம் மூன்றும் இறைஞ்ச மூவுலகின் உச்சி
கனைகழல் அரசநிற்றல் கைவலம் ஆகும் கண்டாய்.

வீரக்கழல் அணிந்த வேந்தனே! எட்டு கர்மங்களும் அடியோடு நீங்கிய காலத்தில், காயானது முற்றி வெடித்ததும் விரைந்து செல்லும் ஆமணக்குக் கொட்டையைப்போல் உயிர் எண்வகைக் குணங்களும் நிறைந்து மேல்நோக்கி ஓடி முனிவர்களும் மூவுலக உயிர்களும் தொழுது நிற்க உலகின் உசிக்குச் சென்று அங்கு நிலை பெறுவது திரவிய மோட்சம் எனப்படும்.

## மும்மணிகள்

107. உரைத்த இப்பொருளின் மெய்ம்மை உணர்வது நல்ல ஞானம்
புரைப்பறத் தெளிதல் காட்சி பொருந்திய இரண்டும் ஒன்றில்
தரித்தல் நல்லொழுக்கம் ஆகும் சாற்றிய மூன்றும் ஒன்றின்
விரைபொலி தாரோய் வீட்டின் மெய்ந்நெறி ஆவ தாமே.

'நறுமணமும், அழகும் நிறைந்த மலர்மாலை அணிந்த வேந்தனே! இதுவரை கூறிய உயிர் முதலாகிய ஒன்பது பொருள்களின் இயல்பினை உள்ளவாறு உணர்தல் நல்ல ஞானமாகும், அதில் ஐயத்திற்கிடமின்றி நம்பிக்கை கொள்வது நற்காட்சியாகும், நல்ஞானம், நற்காட்சிக்கேற்ற ஒழுக்கத்தை மேற்கொள்வது நல்லொழுக்கமாகும்; இம்மூன்றும் மாறுபடாது உயிருடன் பொருந்துமானால் அதுவே முக்திக்குரிய நெறியாகும். இதில் ஐயமில்லை' என்று உயிர் முதலான ஒன்பது பொருள்களின் தன்மையை சுயம்பு தீர்த்தங்கரர் அருளிச் செய்தார்.

## அரசன் நகருக்குத் திரும்புதல்

108. எழுதரு பருதிமுன்னர் இறைஞ்சிய கமலம் போலத்
தொழுது எதிர்முழுதும் கேட்டுப் போய் நகர்த் துன்னிச் சுற்றம்
முழுதையும் அழைத்து முத்திக் கரசனாய் முயல்வன்என்று
பழுதிலாப் புதல்வன் தன்மேல் பாரைவைத்து இனைய சொன்னான்.

உயிர் முதலான இவ்வொன்பது பொருள்களின் இயல்பினைக் கேட்ட வைசயந்தன் உதித்தெழும் கதிரவனுக்கு முன்னால் மலர்ந்து வணங்கும் தாமரை மலர்போல இறைவனைத் தொழுது சென்று நகரடைந்தபின் தனது சுற்றத்தினரை அழைத்து 'வீட்டுலக ஆட்சியைப் பெற முயல்வேன்' அதாவது துறந்து தவத்திற்குச் செல்வேன்' எனக்கூறித் தனது அரச பொறுப்பினை முதல் மகனுக்கு அளிக்க முற்பட்டு அவனுக்குச் சில நீதிகளைக் கூறலுற்றான்.

109. இளமையும் எழிலும் வானத்து இடுவிலின் நீண்ட மாயும்
வளமையும் கிளையும் வாரிப் புதியதன் வரவு போலும்
வெளியிடை விளக்கின் வீயும் ஆயுவும் என்று வீட்டுக்கு
உளபகல் ஊக்கம் செய்வார் உணர்வினால் பெரிய நீரார்.

'நமது இளமையும், எழிலும் வானத்தே தோன்றும் வண்ணவில்லைப் போல விரைவில் மறையும், வளமிக்க செல்வமும் நிறைந்த சுற்றமும் மழை பெய்கின்ற காலத்துத் தோன்றி பிறகு வற்றிப்போகும் வெள்ளத்திற்குச் சமமாகும்; நமது ஆயுளானது வெட்ட வெளியில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கைப்போல் எந்த நேரத்திலும் முடியக் கூடியது; எனவே இவற்றை நன்குணர்ந்த மெய்யறிவாளர்கள் தாங்கள் வாழும் நாள்களில் வீடுபெறும் முயற்சியை மேற்கொள்வார்கள்'.

110. கடல்களும் மலையும் கானும் வானமும் கடல்கள் சூழ்ந்த
திடர்களும் கயமும் ஆறும் நாளிகைப் புறவும் தீராப்
படுதுயர் நரகமேழும் நிகோதமும் பதேசம் முன்னர்
உடல்கிடந்து அழிந்திடாத இடமில்லை உணரின் என்றான்.

மேலும் நாம் சற்றுச் சிந்திப் போமானால் இதுகாறும் நமது உயிரானது இவ்வுலகத்தில் உள்ள கடல்கள், மலைகள், காடுகள், வானுலகங்கள், தீவுகள், நதிகள், நாளிகைகளின் அகப்புற இடங்கள் தீராத்துயர் தரும் ஏழுவகை நரகங்கள் ஆகிய இடங்களில் உடலுடன் பொருந்தி துன்பத்தை எய்தி இறக்காத இடம் எதுவுமே இல்லை. இதை உணர வேண்டும்.

111. வெருவுறு துயரந் துய்த்து விலங்கினுள் மயங்கும் போழ்தும்
மருவியாங் கருவின் மக்கள் யாக்கையின் வருந்தும் போழ்தும்
எரியன நரகின்மூழ்கி எழுந்து வீழ்ந்து அலறும் போழ்தும்
அருகன சரண மல்லால் அரண் பிறிதிது இல்லை கண்டாய்.

அஞ்சி நடுங்கும் தன்மையுடைய விலங்குகளாய்ப் பிறந்து மயங்கிய காலத்தும், மனித வயிற்றின் கருவிலே தங்கிப் பிறந்து வாழ்நாள் முழுதும் வருந்திய காலத்திலும், நெருப்பிற்கு நிகரான நரகத்தில் தோன்றி அலறிய காலத்தும், நமக்குத் துணையாக இருப்பது அருகபெருமானது பாதத்தைத் தவிர வேறொன்றுமில்லை. இதை நன்குணர்வாயாக.

112. இறந்தநம் பிறவி மேனாள் எண்ணுதற் கரிய தம்முள்
கறந்துகொண்டு உயிரை உண்ணும் காலன்வாய்ப் பட்ட போழ்தும்
பிறந்துநாம் கதிகள் நான்கிற் பெருந்துயர் உழக்கும் போழ்தும்
துறந்திடா வினைகள் அன்றித் துணைபிறி தில்லை கண்டாய்

கணக்கில் அடங்காமல் கழிந்த நமது பிறவிகளில் கொஞ்சம் கொஞ்சமாக நமது உயிரை உண்ணும் கூற்றின் வாய்ப்பட்ட காலத்திலும், நான்குகதிகளில் மாறிமாறிப்பிறந்து பெருந்துன்பத்தை உற்ற காலத்தும், நம்மைவிட்டு நீங்காமல் இருக்கும் நாம் செய்த வினைகளைத் தவிர வேறு துணை நமக்கிருந்ததில்லை என்பதையும் உணர்வாயாக.

113. காதிகள் நான்கும் வீய்ந்த கணத்துளே காணற் பாடில்
ஆதியாய்ப் பிறிதி னாய ஒன்றிடும் அனந்த நான்மை
ஓதினோர் வகையின் ஆற்றல் உயிரினான் முடிந்த முன்னே
காதியா மேகம் சூழ்ந்த கதிரென நின்ற கண்டாய்.

உயிரினது மாறுபட்ட தன்மையினாலே அதனிடத்து இறுகிய நான்கு காதிகர்மங்களும் உயிரினது முயற்சியினாலே நீங்கிய உடன் நான்கு ஒப்பற்ற உயர் தன்மைகள் உயிருடன் சேரும், இத்தகு அற்புத சாதனை உயிரினாலேயே செய்து முடிக்கப்பட்டது. இந்நிலைக்கு முன் அதாவது காதிகர்மங்கள் பந்தித்திருந்தபோது மேகக் கூட்டங்களால் சூழப்பட்டிருந்த கதிரவனைப்போல் உயிர் இருந்தது.

114. குற்றமோர் மூன்று நான்கு கதிகளில் பொறிகள் ஐந்தில்
பற்றிய காயம் ஆறில் பழவினைத் திரிவோர் ஏழில்
சுற்றிய வினைகள் எட்டில் தோற்றிய சுழற்சி கண்டாய்
கற்றவர் கடக்க எண்ணும் மாற்றிது கடிகொள் தாரோய்.

மெய்யறிவுடைய மேலோர்கள் கடந்து செல்வதற்கு முயலும் இந்தப் பிறவி எத்தகையதெனின், ஆசை, செற்றம், மயக்கமென்னும் மூன்று குற்றங்களால் நான்குவகைக் கதிகளில் ஐவகைப் பொறிகளுடன் சேர்ந்த ஆறு வகையான பிறப்புக்களில் பழவினை பற்றித்திரியும் ஏழு வழிகளில் சேர்ந்துள்ள எட்டு வினைகளுடன் உயிருக்குண்டான சுழற்சியாகும்.

115. எழுகயிற கன்றும், ஈரேழ் கயிறுயர்ந்து இடையில் ஒன்றாய்
முழவென இடையில் ஐந்தாய் முடியொன்றால் அடியில் ஏழாய்
அழிவிலா உலகின் தோற்றம் அனந்தமாம் படிப்பதேசம்
எழவெனத் திரண்ட தோளாய் இறந்தநாள் பிறந்த வென்றான்.

'இரும்புக் கம்பங்களைப் போன்ற வலிமை மிக்க தோள்களையுடைய மைந்தனே (இவ்வுலகின் தோற்றம் எத்தகையதெனின்) அடியில் ஏழு கயிறு அகலமும் உச்சியில் ஒரு கயிறு அகலமும், இடைப்பகுதியில் ஒரு கயிறு அகலமும், மேல்பாதியில் உச்சிக்கும் மையப்பகுதிக்கும் இடையில் ஐந்து கயிறு அகலமும் மொத்த உயரம் பதினான்கு கயிறும் உடைய அழிவற்ற இந்த உலகப் பகுதியில் நாம் பிறந்தும், இறந்தும் உழன்ற நாள்கள் எண்ணற்றவையாகும்' என்றான்.

116. என்பினை நரம்பில்பின்னி உதிரம் தோய்த்து இறைச்சி மெத்திப்
புன்புறம் தோலின் மூடி அழுக்கொடு புழுக்கள் சோரும்
ஒன்பது வாயிற் றாய ஊன்பயில் குரம்பை தன்மேல்
அன்பறா மாந்தர்கண்டாய் அறிவினால் சிறியநீரார்.

எலும்புகளை நரம்பினால் இணைத்து இரத்தத்திலே தோய்த்து இறைச்சியை மேலே பதித்து வெளிப்புறத்தைத் தோலால் மூடி, அழுக்குடன் புழுக்கள் நெளியும் ஒன்பது வாயில்களுடன் கூடிய நிணம் மிக்க இந்த உடலாகிய குடிசையின்மீது மாறாத பற்றுடைய மனிதர்கள் அற்ப அறிவும் இழிந்த தன்மையும் உடையவராவர் என்பதை அறிவாயாக.

117. தோன்றி மாய்ந்து உலகம் மூன்றில் துயர்எய்தும் உயிர்கள் தம்மை
ஈன்றதாய் போல ஓம்பி இன்பத்துள் இருத்தி நாதன்
மூன்றுல கிற்கும் ஆக்கி முடிவிலாத் தன்மை நல்கும்
ஆன்றநல் லறத்தைப் போலும் அரியது ஒன்றில்லை என்றான்.

இம்மூவுலகத்திலும் பிறந்தும் இறந்தும் துயருறும் உயிர்களைத்தாய்போல் பேணி உயர் பிறப்புக்களில் செலுத்தி இன்பத்தைக் கொடுத்து முடிவில் மூவுலகத்திற்கும் தலைவனாகும் அரகந்த நிலையை நல்கி முடிவற்ற வீட்டினை அளிக்கவல்ல மிகச் சிறந்த ஜின தர்மத்தைக் காட்டிலும் மேலானது உலகில் வேறில்லை என்றான் வைசயந்த மன்னன்.

(வேறு)

118. அரியது திருவறம் அல்லது இல்லையேல்
மருவிய திருவறம் ஒருவி மன்னனாய்
உருகெழு முடிகவித்து உலகம் ஆள்வது
பெருவிலை மணியினைப் பிண்டிக் கீவதே.

அது கேட்ட சஞ்சயந்தன் ஜின தர்மத்தைக் காட்டிலும் சிறந்தது வேறொன்றில்லை என்பதை உணர்ந்து ஆன்றோர்களால் மேற்கொள்ளப்பட்ட அவ்வறத்தினை ஏற்காது விட்டு, ஒளிமிக்க முடியினைத் தரித்து இவ்வுலகை ஆள்வது பிண்ணாக்கிற்கீடாக மதிப்புமிக்க மணியினைக் கொடுப்பதற்கு ஈடாகும்.

119. ஆதலால் அருளியது உறுதி அன்றெனப்
போதுலாம் முடியினான் புகழ்ந்து பூமிக்கு
நாதனாய்ச் சயந்தனை நாட்ட உற்றனன்
தாதுலாம் அலங்கலான் தானும் நேர்ந்திலன்.

எனவே தாங்கள் உலகை ஆளும்படி என்னைப் பணித்தது ஏற்புடையதன்று என மறுத்துக் கூறினான். அப்படி மறுத்துக் கூறிய மகனைப் பெரிதும் புகழ்ந்து, ஆட்சிப் பொறுப்பினை அடுத்த மகனான சயந்தனிடம் ஒப்படைக்க விரும்பினான். மகரந்தம் நிறைந்த மாலையை அணிந்த அத்திருமகனும் அரசை ஏற்க இசையாது மறுத்துரைத்தான்.

120. அறிவினால் சிறிய நீரார் ஆன்றவர் தாங்கள்சென்ற
நெறியினைப் பிழைக்கப் போகின் மாற்றிடைச் சுழல்வர் நீடு
மறுவிலாக் குணத்தி னீர்கள் மாற்றிய அரசுமேவின்
நெறியினால் கதிகள் நான்கின் நின்றுயான் சுழல்வன் என்றான்.

அறிவிற் குறைந்த ஒழுக்க மற்றவர்கள் ஆன்றோர்கள் மேற்கொண்ட நெறியிற் செல்லாது வேறு வழியில் செல்வராயின், பிறவியிற் கிடந்து உழல்வர் என்பது உறுதியாகையால் குற்றமற்ற குணங்களையுடைய தாங்களும் என் அண்ணனும் வெறுத்தொதுக்கிய ஆட்சியை ஏற்பேனாயின் முறையாக நான்கு கதிகளில் நிலைத்து உழல்வேன் என மறுத்தான்.

121. வானத்தின் துள்ளி யல்லாமல் வருந்தினும் விரும்பல்செல்லா
மானத்தை உடைய புள்ளின் மைந்தர்கள் மறுத்துநிற்பக்
கானப்போர் ஏற்றின் பாரம் கன்றின் மேலிட்ட தேபோல்
தேனொத்த முடியை மன்னன் சிறுவன்தன சிறுவற்கு ஈந்தான்

எவ்வளவுதான் நீர் வேட்கையால் வருந்தினாலும் விண்ணிலிருந்து விழுகின்ற மழைத்துளிகளைத் தவிர வேறு நீரினை உண்ண விரும்பாத வானம்பாடி பறவைகளைப் போன்று மைந்தர்கள் இருவரும் ஆட்சியை ஏற்க மறுத்ததால் வேறு வழியின்றிக் காட்டில் திரியும் பேராற்றல் மிக்க எருதின் மேல் ஏற்றக்கூடிய பளுவினை ஒரு கன்றின்மேல் வைத்ததுபோல் மன்னனானவன் தனது மூத்த மைந்தனுடைய மகனான வைசயந்தனிடத்தில் இனிய ஆட்சியை அளித்தான் (பாட்டன் பெயரையுடையவன் பேரன்)

122. மண்ணினுக்கு இறைமை பூண்டான் மன்னன் வைசயந்தன் என்றே
திண்முரசு அறைந்த பின்னைச் சிறப்பொடும் சென்று புக்கு
புண்ணியக் கிழவன் தன்னைப் புகழ்ந்தடி பணிந்து பொய்தீர்
பண்ணவர் படிமம் கொண்டார் பார்த்திபர் குழாத்தி னோடே.

அடுத்து, இவ்வாட்சிப் பொறுப்பினைப் பேரனான வைசயந்தன் ஏற்று மன்னனாகின்றான் என்ற செய்தியை உலகிற்கு முரசறைந்து அறிவித்த பின்பு வைசயந்தன் முதலான மூவரும் மன்னர்கள் பலருடன், பூசைக்குரிய பொருள்களை ஏந்திச் சமவ சரணமடைந்து சுயம்பு நாமத் தீர்த்தங்கரரைப் புகழ்ந்து, அடிபணிந்து, குற்றமற்ற இறைவனது உருவமான நிர்வாணத் துறவினை (கீழ்க்கண்டவாறு) மேற்கொண்டனர்.

123. மணிமுடி கலிங்க மாலை மணித்துணர் அனைய குஞ்சி
பணிவொடு பரிந்து நின்றார் பருமத யானை ஒத்தார்
குணமணி அணிந்து குன்றாப் பண்ணவர் குழாத்தைப் புக்கார்
இணையிலாச் சித்தி நன்னாட்டு இளவர சியன்ற தொத்தார்.

மணி முடியையும் பட்டாடைகளையும், நீலமணியின் கதிர்களைப் போன்ற கருமைமிக்க தலை முடியினையும் நீக்க வேண்டி முறைப்படி களைந்து நின்றவர்களது தோற்றம், தன் வயப்படுத்தும் பொருட்டுப் பாகர்களால் மணி முதலியவைகள் நீக்கப்பட்டு நின்ற மதயானையைப்போல் இருந்தது, மேலும் நற்காட்சி முதலிய மும்மணிகளைத்

தரித்திருந்த மூவரும் முனிவர்களின் குழுவிலே சேர்த்து வீட்டுலகின் இளவரசர்களை நிகர்த்தனர்.

124. ஆங்கவர் அங்க பூவம் ஆதிநூல் ஓதி யார்க்கும்
தாங்கரும் கொள்கை தாங்கித் தாமுடன் சென்று பின்னாள்
ஓங்கிய உலகம் மூன்றும் ஒருவழிப் படுக்கல் உற்றுப்
பாங்கினால் வைசயந்தன் பருப்பதச் சிகரம் சேர்ந்தான்.

முனிவர்கள் குழுவினைச் சேர்ந்த அந்த மூன்று முனிவர்களும் அங்காகமம் முதலிய அனைத்து ஆகம நூல்களையும் கற்றுணர்ந்து மற்றறவர்களால் ஏற்றற்கரிய உயர் ஒழுக்கங்களை மேற்கொண்டு அந்நெறியிலிருந்து தவறாது தவமியற்றியபின் மிகப் பரந்த மூன்றுலகங்களையும் தன் வயப்படுத்தும் பொருட்டு வைசயந்த முனிவர் மட்டும் ஓங்கிய ஒரு மலைச் சிகரத்தைச் சேர்ந்தார்.

125. மழை பனி வெயில்கள் தாங்கி மலைமிசை மலையைப் போல
எழில்பெற நின்ற போழ்தின் எழுந்த சுக்கிலத்தி யானம்
பழவினை முழுதும் பாறப் பரந்தன அனந்த நான்மை
முழையிடைப் பழகிற் றேனும் விளக்கின்முன் இருளுண் டாமோ.

மலையின்மீது மலை ஒன்று நின்றதுபோல் மழை, பனி, வெயில் என்னும் மூன்று பருவங்களில் மிக்க அழகுடன் குலையாத தியானத்திலே தொடர்ந்து நின்றதன் பயனாகத் தோன்றிய சுக்கிலத் தியானத்தின் முதல் இரு நிலைகளால், தொடர்ந்த பழவினைகள் அடியோடு ஒழிந்தவுடன், கடையிலா அறிவு முதலிய நான்கும் நிறைந்தன, மலைக் குகையிலே நீண்ட நாள்கள் தங்கியிருந்தாலும் இருளானது விளக்கின் முன்னால் நிற்க முடியுமோ?

126. சித்தநல் இரதம் சென்ற தாதுக்கள் போலத் தாது
ஒத்தொரு வகைய தாகி ஒளியுமிழ்ந் திலங்குமேனி
சித்திரத்து இயற்றப் பட்ட படமெனத் தேவர் சென்றார்
முத்தி பெற்றிருந்த கோவும் அதன்முன்னர் விளக்கை ஒத்தான்.

மிகச் சிறந்த இரதம் என்னும் அற்புத மூலிகைச்சாறு சேர்ந்தவுடன் இரும்பு போன்ற உலோகங்கள் தங்கமாக மாறுவதைப்போல, தவத்தின் பயனால் தோன்றிய நான்கு குணங்களினாலே, உடலிலே உள்ள உறுப்புக்களெல்லாம் ஒப்பற்று விளங்கின. அச்சமயத்திலே தேவர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து திரை ஓவியங்களைப்போல் நின்றனர், வைசயந்த பட்டாரகரும் அவ்வுருவங்களை விளக்கும் தீபத்தைப்போல் பிரகாசித்தார்.

127. தேமலர் மாரி சுண்ணம் சிதறினர் திசைகள் முட்டத்
தூமமும் எழுந்ததீபம் சுடர்ந்தன மிடைந்த தேவர்
தாமமும் சாந்தும் ஏந்தித் தாம்பணிந்து எழுந்து நின்று
காமனைக் கடந்த கோமான் கழலடி பரவ லுற்றார்.

இறைவனை வழிபட வந்த விண்ணவர், தேன் நிறைந்த மலர்களையும், நறுமணப் பொடிகளையும் கொண்டு அர்ச்சித்தனர், மணி விளக்குகள் ஒளி வீசுமாறு பரப்பினர், நான்கு திசைகளிலும் நறும்புகை கமழுமாறு செய்தனர், பின் அவர்கள், மலர் மாலைகளையும், சந்தனம் முதலியவற்றையும் ஏந்தி இறைவனைச் சூழ்ந்து பாதங்களை வணங்கி நின்று காமனைவென்ற இறைவனைப் போற்றித் துதிக்கலானார்கள்.

## தேவர்தம் துதி

(வேறு)

128. உவத்தல் காய்தலால் உன் திருவடித் தலத்து எழுந்தோர்க்கு
உவத்தல் காய்தல் உன் திருவுளத்து ஒன்று நீ இலையேல்
சுவர்க்க மாநரகத்தவர் துன்னுவது உனது
தவத்தின் தன்மையோ தம்வினைத் தன்மையோ அருளே.

'உனது பாதத்தை வந்தடைந்த மக்கள் உன் மீது விருப்பம், செற்றம் முதலிய பல்வேறு தன்மைகளை உடையராயினும் உனது அழகிய உள்ளத்திலே அவர் மாட்டு விருப்பு வெறுப்பு என்பதில்லை; அப்படி இருந்தும் உன்னை (உனது நெறியை) வெறுத்தவர்கள், நரகத்தையும் ஏற்றவர்கள் சுவர்க்கத்தையும் அடைவது உனது தவத்தின் பெருமையினாலோ, அன்றி அவர்தம் வினைப் பயத்தினாலோ எங்களுக்குக் கூறி அருள் செய்வாயாக'.

129. இறந்த காதிகள் நான்மையும் அழிந்த அக்கணத்தே
நிறைந்த நான்மையும் வானவர் நிலையுடன் தளராப்
பறந்து வந்துநின் திருவடி பரவுவது இதுவுன்
சிறந்த தன்மையோ திருவறத்து இயற்கையோ அருளே.

'கொடிய காதி கர்மங்கள் நான்கும் அழிந்த அக்கணத்திலேயே நான்கு கடையிலாத் தன்மைகள் நிறைந்தன. அதே நேரத்தில் தேவர்களின் இருக்கைகள் அசைந்தன, உடனே விண்ணவர் விரைந்து வந்து உன்னை வழிபடுகின்ற இத்திறம் உனது மேலான குணத்தினாலோ அல்லது திருவறத்தின் பெருமையினாலோ கூறி அருள் செய்வாயாக.'

130. குற்றம் ஒன்றிலை எனிற் குற்றம் மூன்றுநீ உரைத்தாய்
பற்றுநீ இலை என்னிலு லோகம் உன்பற்றாம்
சுற்றம் நீயிலாய் என்னில் எவ்வுயிரும் உன்சுற்றம்
அற்றம் நீயில்லாய் முனிவர்கோன் ஆயதோர் மாயம்.

'உனக்கு எவ்வித குற்றமும் இல்லை எனினும் மூன்று குற்றங்களின் தன்மைகளையும் (மனம், மொழி, செயல்) உரைத்தருளினாய், யார் மட்டும் உனக்குப் பற்றில்லை என்றாலும் உலகம் முழுதும் உன்னிடம் பற்றுக் கொண்டுள்ளது. யாரையும் சுற்றமாகக் கருதாத உமக்கு உலக உயிர்கள் அனைத்தும் சுற்றமாக உள்ளன, யாதொரு சோர்வுமில்லாத நீ முனிவர்களின் தலைவனாக விளங்குவது வியப்பாக உள்ளது.'

131. அறிவு நீயிலை ஒன்றலது எமக்கவை அனேகம்
பிறவி நீயிலை யாங்களோ பிறவியிற் பெரியோம்
செறிவதோர் கதிஉனக்கிலை எமக்கு நான்கிவற்றால்
வறியை நீஎம்மை ஆட்கொண்ட வசியிது பெரிதே.

'கடையிலா அறிவு என்னும் ஒரே அறிவினை நீ பெற்றுள்ளாய். மதி, சுருதி என்னும் பல்வேறு அறிவினை நாங்கள் பெற்றுள்ளோம்; பிறப்பு என்பதே உனக்கில்லை. கணக்கற்ற பிறப்புக்கள் எங்களுக்குண்டு; உனக்கு வேறு கதியில்லை எங்களுக்கு நால்வகை கதிகள் காத்திருக்கின்றன. இவற்றை எல்லாம் பார்க்கும்போது எங்களைக் காட்டிலும் நீ தான் வறியவன். இருந்தாலும் எங்களை ஆட்கொண்ட உமது நிலை போற்றற்குரியது!'

132. என்று வானவர் இறைவனை இறைஞ்சும் அப்பொழுதே
அன்று மூவல கத்துள அமரரும் வியப்ப
நின்றதோர்படி நிருமியா அரிவையர் சூழச்
சென்ற னன்தர ணேந்திரன் சிறப்பொடும் விரைந்தே.

என்று இவ்வாறு பலவகையாக விண்ணவர் போற்றிப் புகழும் சமயத்தில் மூவுலக தேவர்களும் வியக்கும் வண்ணம் ஒப்பற்ற தனது பொலிவுமிக்க தோற்றத்தை மேலும் அழகு

செய்து கொண்டு மனைவியர் புடைசூழ தரணேந்திரன் என்னும் பவணலோகத்துத் தேவன் பூசைக்குரிய பொருளுடன் அங்கு வந்தடைந்தான்.

(வேறு)

133. நிழல் உமிழ்ந்து இலங்கும் மேனி நிறைமதி முகமும் செம்பொன்
கழலணிந்து இலங்கும் பாதம் கமலங்கள் காம னேயும்
குழலணிந்து இலங்கு நல்லார் வடிவினால் குழைய வாங்கும்
தழலுறும் தன்மைத்து அந்தத் தரணனது உருவு தானே.

ஒளி வீசுகின்ற காமனுக்கு நிகரான உடலழகும், முழுமதி போன்ற முகமும் தாமரை மலர்களுக்கு நிகரான செம்பொன் கழலணிந்த பாதங்களும் உடைய தரணேந்திரனது தோற்றம் அழகான ஒப்பனை செய்த கூந்தலையுடைய எழில் மங்கையரின் உள்ளங்களை ஈர்க்கும் தன்மையுடையதாகும்.

134. ஆங்கு அவன் உருவம் காணா அருந்தவன் சயந்தன் அந்தோ
வீங்கிய தவத்தி னால்மேல் இவ்வுரு வாக என்னா
நீங்கிய காட்சித் தாய நிதானத்தை நிறைய நின்றான்
ஓங்கிய உலகம் வேண்டாது உமிகொண்ட ஒருவன் ஒத்தான்.

அங்கு அவ்வாறு தோன்றிய தரணேந்திரனது அழகிய தோற்றத்தைக் கண்டவுடன் தவக்கோலத்திலிருந்த சயந்த முனிவன் மயங்கி எனது சிறந்த தவப் பயனாவ் இத்தகைய எழில் மிக்க உருவத்தை அடுத்த பிறவியில் பெற வேண்டுமென்ற நிதானமுடையவனாய், தான் இதுகாறும் போற்றிய நற்காட்சி முதலியவற்றைத் துறந்தவனாய், மேன்மைமிக்க வீட்டுலகை வேண்டாதவனாய் உமியை விரும்பிப் பெற்றவனுக்கு நிகரானவன்.

135. அருந்தவம் தாங்கி மேரு அனைவர்க்கு ஏலும் ஆசை
துரும்பிடைத் தோன்று மேனும் துகளினும் சிறிய ராவர்
அருந்தவன் இவனிற் கண்டாம் ஆசைஇல் லாமை யன்றோ
பெருந்தவம் ஆத லன்றேல் பிறவிவித் துலர்த்த லன்றே.

அரிய தவத்தை ஏற்று மேருமலைக்கு நிகராக விளங்கியவராயினும் அவரிடம் துரும்பை விரும்பக் கூடிய சிறு ஆசை தோன்றுமாயின் அக்கணமே அவர்கள் அணுவினும் சிறிய அற்பராவார்கள்; இத்தகைய இழி நிலையை அருந்தவ முனிவராகிய சயந்தனிடத்திலே கண்டோம். பெருந்தவம் என்பது ஆசையற்ற நிலையல்லவா? இதை விடுத்துச் சிறிய ஆசையே தோன்றினும் அது பிறவிக்கு விதையை உலர்த்தி வைத்ததற்கு நிகரல்லவா?

136. கனிந்த நெய்க் கவளம் கையில் வைத்துடன் கழறு வாரை
முனிந்திடும் களிறு போல்வார் முத்தியை விளைக்கும் நீரார்
மனம் கொளத் துறந்தி டாதே வால்குழைத்து எச்சிற் கோடும்
சுணங்கனைப் போலும் நீரார் மாற்றிடைச் சுழலு நீரார்.

வீட்டுலகை விரும்பி நின்ற மாமுனிவர்கள், கையிலே நெய் கலந்த கவளத்தை ஏந்தி அழைத்தாலும் அதை முனிவுடன் வெறுத்துச் செல்கின்ற களிறுக்கு நிகராவர்; உறுதியுடன் உளம் நிறைந்த துறவினை ஏற்காதவர்கள் வாலைக் குழைத்துக்கொண்டு எச்சில் உணவிற்காக ஓடும் நாய்க்கு நிகரானவர், அவர்தாம் பிறவிச் சுழலிலே சிக்கித் தவிக்கும் தன்மையுடையவர்.

137. நஞ்சினை அமிர்தம் என்றே உண்டவன் அயர்ந்து பின்னைத்
துஞ்சுவது அஞ்சிக் கான்ற நஞ்சையே துய்த்தல் போலும்
புஞ்சிய பொறியின் போகம் மாற்றிடைச் சுழற்றும் என்னா
அஞ்சிமுன் துறந்த போகத்து அருந்தவன் ஆசை தானே.

ஐம்பொறிகளால் ஆகிய இன்பமானது பிறவிச் சுழற்சியில் சிக்க வைக்கும் என அஞ்சி அதை நீக்கித் துறந்த சயந்தன், மீண்டும் அவ்வின்பத்தை விரும்பிய நிலை, நஞ்சினை அமுதமென்று மாறாக எண்ணி அருந்திய ஒருவன் தான் அருந்தியது நஞ்சென்று அதை வெளியே துப்பியபின் மீண்டும் அதையே உண்டதற்கு ஒப்பாக அமைந்தது.

138. ஐந்தலை அரவம் தன்வாய் ஐந்துடன் கலந்த நஞ்சில்
துன்பம் ஓர் கடிகை யல்லால் துஞ்சினால் தொடர்ந்தி டாதாம்
ஐம்பொறி அரவம் தன்வாய் ஒன்றினால் ஆய நஞ்சு
துஞ்சினால் அனேக காலம் தொடர்ந்துநின்று அடுங்கள் கண்டீர்.

ஐந்து தலைகளையுடைய நாகம் தனது ஐந்து வாய்களினாலும் கடித்துச் செலுத்திய நஞ்சானது ஒருகண நேரத் துன்பத்தைக் கொடுத்து இறக்கச் செய்வதல்லாமல் மறுபிறவிக்குத் தொடராது; ஆனால் ஐம்பொறிகள் என்னும் அரவமானது தனது ஒரே வாயினால் செலுத்திய நஞ்சானது பல பிறவிகள் வரை தொடர்ந்து நெடுங்காலம் வரை வாட்டும்.

139. காட்சியைக் கலக்கி ஞானக் கதிர்ப்பினைத் திரித்துப் புக்கான்
மீட்சியில் உலகம் ஏற்றும் ஒழுக்கத்தை அழித்து வையம்
ஆட்சி பெற் றவனை வையம் அதனுக்கே அடிமை யார்க்கும்
மாட்சித்தான் நிதானம் தன்னை மனம்கொள்ளார் மதியின்மிக்கார்.

சயந்தன் நற்காட்சியைச் சிதைத்து நல்லறிவாகிய ஒளியை ஒழித்து, மீளா உலகிற்குச் செலுத்தும் உயர் ஒழுக்கத்தை அழித்துச் சென்று பவணலோகத்துத் தலைவனானான், இவ்வுலக வாழ்வை விரும்பி அடைந்தவனை இந்த வையமானது அவனைத் தனக்கு அடிமையார்க்கும் பெருமையுடையது. எனவே அறிஞர் பெருமக்கள் விருப்பச் சிந்தனைக்கு உள்ளத்தே இடம் தரமாட்டார்கள்.

140. ஒழிந்தநால் வினையும் வென்றிட்டு உலகொரு மூன்றும் ஏத்த
எழுந்துசென் றுலகத் துச்சி எய்தினான் வைசயந்தன்
அழுந்திய நிதானத் தாலே சயந்தன்அவ் அமர னாய்க்கீழ்
விழுந்தனன் ஒழிந்தவீரன் சரிதையான் விளம்ப லுற்றேன்.

வைசயந்த முனிவனானவன் எஞ்சிய அகாதி கர்மங்கள் நான்கினையும் வென்று மூன்றுலகும் தொழுது நிற்க மேல் நோக்கிச் சென்று உலகத்து உச்சியாகிய வீட்டுலகு எய்தினான், நிலைபெற்ற ஆர்வச் சிந்தனையாலே சயந்தன் அமரனாகிப் பவண லோகத்தே அடைந்தான், அடுத்து எஞ்சியுள்ள சஞ்சயந்த முனிவருடைய வரலாற்றைப் சூறுகின்றேன் கேள் என்று ஆதித்யாபதேவன் தரணேந்திரனை நோக்கிக் கூறுகின்றான்.

**வைசயந்தன் முத்திச் சருக்கம் முற்றுப் பெற்றது.**